
சகல காரிய சித்திதரும் சித்தர் எண்யந்திரங்கள்

சித்திவினாயகர்
எண்யந்திரம்





தாமரை நூலகம், சென்னை - 600 026.

சகல காரிய சித்தி தரும்
சித்தர்

எண் யந்திரங்கள்

ஆசிரியர்
பாலஷண்முகானந்தா

ஓலைச் சுவடிகளிலிருந்து
யந்திரங்களை எடுத்து உதவியவர்
மே. சி. சுப்ரமண்யம்

தொலைபேசி : 23620249

தாமரை நூலகம்
7 N.G.O.காலனி, வடபழனி, சென்னை - 600 026

தாமரை வெளியீடு 56
பதிப்புரிமை பெற்றது
நான்காம் பதிப்பு, மே 2003
ஐந்தாம் பதிப்பு : செப்டம்பர் 2018
ஆறாம் பதிப்பு : மே : 2023

விலை. ரூ. 50.00

அச்சிட்டோர் :
கிரியேடிவ் ஆப்செட் சென்னை - 34

பதிப்புரை

தமிழ் எண்களால் நிரப்பப்பட்ட கட்டங்களை உடைய ஓலைச் சுவடிகளைப் பார்த்தபோது முதலில் அக்கறை தோன்றவில்லை. ஆனால் எண்யந்திரங்களை சித்தர்கள் வகுத்திருக்கிறார்கள் என்பதை அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் வெளிப்படுத்திய போது ஏற்பட்ட வியப்புக்கு அளவே இல்லை.

சித்தர்கள் நவக்கிரகங்களை மகிழ்வித்து அருள்பெறவும். முயற்சிகளில் வெற்றிபெற, போட்டிகளில் வெல்ல, மற்றவர்களை வசியம் செய்து வாழ்க்கையில் முன்னேற, நோய்நொடிகள் அணுகாமல் தடுக்கவும் அவற்றிலிருந்து விடுதலை பெறவும் உதவக் கூடிய திருஷ்டி முதலான தோஷங்கள் ஏற்படாமல் தடுக்க, இவற்றுக்கெல்லாம் உதவக்கூடிய எண் சக்கரங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பது வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய செய்தி.

இந்த சக்கரங்களை விதிமுறைப்படி தயாரித்து முறைப்படி தியானம் செய்வது எல்லோருக்கும் முடியக்கூடிய காரியம். பூஜை அறைகளில் வைத்து வழிபடுவதும் கடைகள், அலுவலகங்களில் மாட்டி வைப்பதும் அளவு கடந்த பலன் தரும் என்பதில் ஐயமில்லை. வாசகர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

வணக்கம்
எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

சென்னை
23—3—91

பொருளடக்கம்

சகல காரிய சித்தி தரும்

சித்தர்

எண் யந்திரங்கள்

எண் சோதிடம்—நியூமராலஜி—இன்று பல பேரால் நம்பப்படுகிறது. பின் பற்றப்படுகிறது. தங்களுடைய பெயர்களைப் பிறந்த தேதியின் எண்ணுக்குச் சரியாக மாற்றிக் கொள்பவர்களைக் காண்கிறோம். புதிய தொழில் களை ஆரம்பிக்கும் போது நிறுவனங்களின் பெயர்கள் நல்ல எண்ணில் அமைய வேண்டும் என்று நினைக் கிறார்கள். நல்ல நாள் பார்க்கும் போது, வண்டி வாகனங்கள் வாங்கும் போது இன்னும் பல விஷயங் களிலும் இப்போது எண்கள் புகுந்து விளையாடத் தொடங்கி விட்டன.

எல்லோரும் இது மேல் நாட்டு முறை என்று தான் நினைக்கிறார்கள். சித்தர்களின் ஓலைச் சுவடிகளை ஆராயத் தொடங்கினால், மேல் நாட்டவர்களின் எண் சோதிட முறைக்கு அடிப்படையே அவற்றிலிருந்து தான் கிடைத்துள்ளது என்பது தெளிவாக விளங்குகிறது.

எழுத்துக்களை மந்திரங்களாக உருவாக்கும் பொழுது அவை உயிர் பெற்று விடுகின்றன. அவை தமது சக்தியால் சூழ்நிலையிலும் மனிதரிடத்தும் விளைவுகளை உண்டாக்கு கின்றன. ஓம், ஸ்ரீம், ஹ்ரீம், க்லீம் போன்ற மந்திரங்களை முழு மனதுடன் உச்சரிக்கும் போது நமது உடலில் உள்ள அவ்வளவு நரம்புகளிலும் ஓர் அதிர்வு உண்டாவதைக்

காண்கிறோம். இந்த மந்திரங்களைத் தாங்களே உச்சரிக்காவிட்டாலும் கூட அவற்றை எழுதிய ஓலை அல்லது தகடை குளிசமாகக் (தாயத்து) கட்டிக் கொள்வதாலும் ஒரு பாதுகாப்புக் கிடைக்கிறது. நன்மை உண்டாகிறது என்று கருதுகிறோம்.

இந்தக் குளிசம் அல்லது தாயத்துக்கு எங்கிருந்து அந்தச் சக்தி வந்தது?

தெய்வத்தின் சக்தி சிலையில் உண்டாக்கப்படுகிறது. அதே சக்தி படங்கள் பதுமைகளிலும் கூட வெளிப்படுகிறது. இது ஒரு நம்பிக்கைதான் என்றாலும் அதை வெறும் மூடநம்பிக்கை என்று ஒதுக்கித் தள்ளி விடுவதற்கில்லை. நாம் வீட்டில் வைத்துப் பூஜிக்கும் படத்தில் உள்ள தெய்வத்தின் சக்தி நாம் அதன் மேல் வைக்கும் பக்தியையும் நம்பிக்கையையும் பொறுத்ததே ஆகும். பக்திக்கும் நம்பிக்கைக்கும் உயிருள்ள சக்தி உள்ளது என்பதை ஆன்றோர் அறிவர். அதே சக்தி தான் ஓலைகள், தகடுகளில் எழுதப்படும் மந்திரங்களிலும் உள்ளது.

விஞ்ஞான பூர்வமாகச் சிந்திப்பவர்களுக்கு இது ஒரு புதிராகத் தோன்றலாம். ஆனால் விஞ்ஞானம் இன்னும் முழுமையான வளர்ச்சி பெற்று விடவில்லை என்பதை அவர்கள் அறிய வேண்டும். காற்றில் உள்ள எல்லாப் பொருள்களையும் விஞ்ஞானம் ஆராய்ந்து விட்டது. ஆனால் மின் அலைகளைப் பரவச் செய்யும் ஈதர் என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது? அது எதனால் மின் கடத்தியாக இயங்குகிறது? இக் கேள்விகளுக்கு விடை காணப்படவில்லை,

கிரகங்களின் கதிர்கள்

நாம் வாழும் பூமியை ஈதர் என்ற ஆராய்ச்சிக்கு உட்படாத பொருள் சூழ்ந்திருப்பதைப் போலவே கிரகங்களின் கதிர்களும் சூழ்ந்துள்ளன. அண்ட சராசரங்கள் யாவும் அந்தரத்தில் யாதொரு பிடிப்பும் இல்லாமல் சுற்றிச் சுழன்றுகொண்டே இருக்கின்றன. அவை தமக்குள் ஒருவித ஈர்ப்பு சக்தியால் கட்டப்பட்டிருப்பதாலேயே பல ஆயிரம் ஆண்டுகள், பல கோடி ஆண்டுகள் ஆகியும் இன்னும் பாதை மாறாமல், ஒன்றன்மேல் ஒன்று மோதிக் கொள்ளாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றன. இதை விஞ்ஞானம் ஏற்றுக் கொள்கிறது. அப்படியென்றால் நமது பூமி பரந்த ஆகாயம், அவற்றிலுள்ள பல கோடி நட்சத்திரங்கள், அவற்றுக்குக் கட்டுப்பட்டுள்ள சூரியன். அதற்குக் கட்டுப்பட்டுள்ள கிரகங்கள் முதலியவற்றின் கதிர்களுக்குக் கட்டுப்பட்டுள்ளது என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆகவேண்டுமல்லவா?

இந்த பூமி தன்னிலிருந்து வெளிப்படுத்தும் கதிர்களும், அவற்றின் மேல் மற்ற கிரகங்களிலிருந்து அவற்றின் கதிர்கள் வந்து மோதுவதால் உண்டாகும் விளைவுகளும் இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு அணுவையும், மண்ணையும், நீரையும், மலர்களையும், மரம் செடி கொடிகளையும், புழுப் பூச்சிகள் முதலான எண்ணற்ற உயிர்ப் பிராணிகளையும் கட்டுப்படுத்துகின்றன அவற்றுக்கு ஒரு வாழ்வை உண்டாக்குகின்றன. சாதக பாதகங்களுக்கு உட்படுத்துகின்றன என்பதே சோதிட சாஸ்திரத்தின் அடிப்படையாகும்.

சோதிடம் விஞ்ஞான பூர்வமானது என்பதை நாம் வற்புறுத்திச் சொல்லி வருவதன் காரணம் அதுவே. ஒரு குழந்தை பிறக்கும் போது அதன் சிரம் வழியாகவே

முதன் முதலாகக் கதிர்கள் ஊடுருவி அதன் உடலில் பரவுகின்றன. அதனாலேயே விதியைப் பற்றிப் பேசும் பொழுது 'தலை எழுத்து' என்று கூறுகிறோம். சிரசின் வழியாக ஊடுருவிச் செல்கின்ற கதிர்களாலேயே அதன் வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறது. அந்தக் கதிர்களின் தன்மை அப்போது கிரகங்கள் அமைந்துள்ள நிலைமைக்குத் தகுந்ததாக அமைகிறது அதையே சோதிடத்தின் மூலமாக நாம் அறிகிறோம்.

கிரகங்களுக்கு நமது பூமியின் மேல் உள்ள ஒவ்வொரு அணுவின் மேலும் உள்ள சக்தியை நமது முன்னோர்கள் நன்கு அறிந்திருந்தனர். சோதிடத்தின் நுட்பங்களை அறிந்தவர்கள் பலன்களைச் சொல்லும் போது பல சமயங்களில் நாம் திகைத்துப் போகிறோம். அவை விஞ்ஞான பூர்வமான உண்மைகள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டால் மாயா ஜாலம் என்ற முடிவுக்குத் தான் வர வேண்டியதாக இருக்கும். அதே போல் மந்திர வாதம் கூட விஞ்ஞான பூர்வமானதே என்பதைக் கண்டுபிடித்து உணரக் கூடிய காலம் ஒன்று வரும் என்பதையும் திடமாக நம்பலாம்.

நன்மை தீமைகள்

மனிதனுக்கு வாழ்க்கையில் உண்டாகும் சகல நன்மை தீமைகளுக்கும் கிரகங்களே காரணம் என்பதை நம் முன்னோர் அறிந்திருந்தனர்.

பூர்வ ஜென்மக் கிருதம் பாவம்
வியாதி ரூபணே பீடிதம்
தச் சாந்தி ரௌஷதைர் தான நர் ஜபைர்
ஹோமாதிபி கிரிய தௌ:

என்பது சுலோகம். இதன் பொருள் நாம் முன் ஜென்மங்களிலும், இந்த ஜென்மத்திலும் செய்துள்ள, செய்யு

கொண்டிருக்கிற பாவங்களே நோய்களாகவும் வேறு பல கஷ்டங்களாகவும் நம்மை வந்து பீடிக்கின்றன. அவற்றில் இருந்து விடுபடுவதற்காகத் தானம், ஜபம், ஹோமம் முதலானவற்றைச் செய்ய வேண்டும். அவற்றின்மூலம் கிரக சாந்தி செய்து கொள்வதால் நோய், பீடைகளும் நம்மை விட்டு நீங்கும் என்பதாம்.

நோய்களும் கஷ்டங்களும் கிரக தோஷங்களாலேயே உண்டாகின்றன என்பது நம் நாட்டில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள விஷயம். எடுத்துக்காட்டாக ஏழரைச் சனி கஷ்டங்களை உண்டாக்கும். பத்தாம் வியாழன் (குரு) பதவியிலிருந்து ஓட்டும். அஷ்டமச் செவ்வாய் ஆபத்தை உண்டாக்கும் என்பன போன்ற பல நம்பிக்கைகளைக் கூறலாம். இவையெல்லாம் அனுபவ பூர்வமாக சமூகத்தில் அறியப்பட்டு வரும் உண்மைகள் என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

கொஞ்சம் முயற்சி எடுத்துகொண்டால் எந்த கிரகம் எப்படி இருக்கும்பொழுது என்ன கஷ்டம் அல்லது நோய் வரும் என்பதையும், அதை எப்படி விலக்கிக்கொள்ளலாம், நோய் அல்லது கஷ்டம் வருவதற்கு முன்பே தடுத்துக் கொள்ள முடியுமா? வந்த பிறகு போக்கிக் கொள்ள முடியுமா? என்பவற்றையெல்லாம் அறிந்துகொண்டு அதற்குத் தக்கபடி செயலாற்றலாம். மேலும் கிரகங்களை அவற்றுக்குள்ள யந்திரங்கள்மூலம் வசியம் செய்து கொள் வதன்மூலம் அவற்றால் நேரிடக்கூடிய துன்பங்கள், நோய்கள் உண்டாகாமல் தடுத்துக்கொள்வதோடு, அவற் றால் நன்மை பெறவும் முடியும். சித்தர்கள் அதற்கான எண் சக்கரங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக நமது சமுதாயத்தில் பெரும்பான்மை யான மக்கள்—இந்துக்கள் என்ற பொதுப் பெயரால்

அழைக்கப்பட்டாலும் எல்லோரும் ஒரே தெய்வத்தை வணங்குவதில்லை. காட்டேரி கருப்பன் வரை எல்லாத் தெய்வங்களையும் வணங்குபவர்களும் இந்துக்கள் தான். சொல்லப் போனால் இந்து சமயத்தைப்போல் அவ்வளவு விரிவான — சகல தெய்வங்களையும் அணைத்துக் கொள்கிற ஒரு மதம் கிடையாது. ஆயினும் தெய்வ வழிபாட்டு முறைகளை அனுசரித்து இந்து மதத்தை ஆறு பிரிவுகளாக உருப்படுத்தினார் ஆதிசங்கரர். அவை சைவம், வைணவம், சக்திம், காணாபத்யம், ஸ்காந்தம், ஸௌரம் என்பவையாம்.

சைவம்: சிவபெருமானை முழு முதற் கடவுளாக ஏற்றுக்கொள்பவர் சைவர். ஒருவகையில் மந்திர சாஸ்திரத்தின் பெரும்பகுதி 'ஓம் நமசிவய' என்ற மந்திரத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது எனலாம். பைரவன், காளன், வீரபத்ரன், கறுப்பன், காடன், மாடன் முதலான தெய்வங்களை வணங்குபவர்களையும் இந்தப் பிரிவின் கீழ்த்தான் கொண்டு வரவேண்டும். நரபலி கொடுத்து வணங்குபவர்களான கபாலிகர்களும் கூட சிவமதத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சக்தி: சக்தி வழிபாடு செய்பவர்கள் தேவியையே முழு முதற் கடவுளாக ஏற்றுக் கொள்கிறார்கள். தேவியே முதல் தெய்வம் என்றும் உலகம் நடைபெறுவதற்காக சிவன், விஷ்ணு, பிரம்மா முதலான கடவுள்களையும் அவர்களுடைய மனைவிகளையும் மற்ற தெய்வங்களையும் ஆதிபராசக்தியே தோற்றுவித்தாள் என்று கூறுகிறது இந்த மதம். உபாசனா தெய்வங்களான காளி, வராகி, பைரவி, துர்கை முதலான தேவதைகள் முதல்கொண்டு மாரியம்மன், அங்காளம்மன், துலுக்காணத்தம்மன் முதலிய எல்லாப் பெண் தெய்வங்களையும் வணங்குபவர்களையும் இப் பிரிவிலேயே சேர்க்க வேண்டும்.

வைணவம் : விஷ்ணுவை முழு முதற் கடவுளாக ஏற்றுக் கொள்பவர் வைணவர். 'ஓம் நமோ நாராயணாய' என்பதே இவர்களுக்கு அடிப்படையான மந்திரம். உபாசனா தெய்வங்களான நரசிம்மர், அனுமார், சுதர்சனம் (சக்கரம்) முதல்கொண்டு ஸ்ரீராமர், கிருஷ்ணன் முதலான தெய்வங்களை வணங்குபவர்கள் இப்பிரிவினைச் சேர்ந்தவர்கள்.

காணாபத்யம் : விநாயகர், கணபதியை முழு முதற் கடவுளாக ஏற்றுக் கொள்பவர், இப் பிரிவைச் சேர்ந்தவர் எனலாம். பிரணவமாகிய 'ஓம்' என்ற மந்திரமே கணபதி ரூபமாகக் கருதுவர். உலகத்தைக் குறிப்பிட ஒரு வட்டமும் அதற்கு சற்று மேலாக ஓம் என்பதையும் சேர்த்து வரைந்தால் கணபதியின் உருவம் கிடைத்துவிடும். மேற்கூறிய ஆறு சமயத்தவர்களுமே கணபதியை முதலாவதாகத் தொழ வேண்டிய தெய்வமாக ஏற்றுக் கொள்கின்றனர். கணபதியைத் தொழுது ஆரம்பிக்கப்படும் காரியங்களே இடையில் தடை படாமல் செம்மையாக நடைபெற்று முடியும் என்பது நம் மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள நம்பிக்கை. வைணவர்கள் விக்னேஷ்வர் என்றும் நம்பிக்கையாழ்வார் என்றும் கணபதியைக் குறிப்பிடுகின்றனர். மகாகணபதி, வல்லபை கணபதி, சக்தி கணபதி, நர்த்தன கணபதி, வரசித்தி விநாயகர் வலம்புரி விநாயகர், வக்ரதுண்ட விநாயகர் என்று, பலவிதமாக விக்னங்களை (இடையூறுகளை) நீக்கி வைக்கும் விநாயகரைத் தொழுகின்றனர்.

ஸ்காந்தம் : முருகனையே முழு முதற் கடவுளாகக் கூறுவது இம்மதம். ஷண்முகனுக்கு மீறிய தெய்வமில்லை. ஷடாட்சரத்திற்கு மீறிய மந்திரமுமில்லை என்பது இவர்கள் கொள்கை. 'ஓம் சரவணபவ' என்பதே ஆறு

எழுத்து மந்திரம். வட நாட்டவர் ஸ்காந்த பெருமான் என்று வழிபடுவதால் இம் மதம் ஸ்காந்தம் எனப்படும்.

ஸௌரம் : சூரியனை முழு முதற் பொருளாக ஏற்பது இம் மதம். ஒருவகையில் இதையே ஆதிமதமாக கருதுவதும் பொருந்தும். இயற்கை வழிபாட்டிற்கு ஆதாரமானது இம் மதமே என்றும் கூறலாம். சிவனைக் குறித்த புராணங்களிலும் விஷ்ணுவைக் குறித்த புராணங்களிலும் கூட சூரியனை கண்கண்ட தெய்வமாகக் கூறப்பட்டுள்ளது. சூரியனே உலக உற்பத்திக்கு ஆதாரம் என்பது புராண நூல்களில் நன்றாகவே விளக்கப்பட்டுள்ளது. அதிகமான உஷ்ணம்—அது ஒரு பக்கம் வெப்பம் குறைந்தும், ஒருபக்கம் வெப்பம் அதிகமாகவும் ஏற்படுவதால் உண்டாகும் சலனத்தால் காற்றும், காற்று அதிகமாகக் குளிர்வதால் உயிரில்லாத ஜடமாகக் கிடந்த பூமியின்மேல் பனிமூட்டமும், அதன்பின் நீரும், பூமியின்மேல் நீர் தேங்குவதால் பூமியின் இயல்பு மாறுபட்டு அது உயிர்களைத் தோற்றுவிக்கக்கூடிய நிலமாக மாறுவதும், இவையெல்லாவற்றையும் சூழ்ந்துள்ள ஆகாயமும், இப் பஞ்ச பூதங்களே கண்ணில் காணப்படுகின்ற அசையும் பொருள்கள், அசையாப் பொருள்கள் அனைத்துமாக மாறி அகில உலகமும் உண்டானதை வேத புராண இதிகாச நூல்கள் எல்லாவற்றிலுமே விளக்கப்பட்டுள்ளது. சூரிய நமஸ்காரம் மனித வாழ்க்கையில் ஒளியும் ஆற்றலும், செல்வமும் சேர்ப்பது என்பதையும் இந்து மதத்தைச் சேர்ந்த எல்லாப் பிரிவினரும் ஏற்றுக் கொள்கின்றனர். மற்ற தெய்வங்களைவிட நாம் கண்ணால் காண்கின்ற சூரியனே முழு முதற் கடவுள் என்று சொல்வது அறிவுக்கும் பொருத்தமாக இருக்கிறதல்லவா?

எண் சக்கரங்கள்

எழுத்துக்களைப் போலவே எண்களுக்கும் உயிர் உள்ள சக்தி இருக்கிறது. அவற்றை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் சக்கரமாக அமைத்துவிட்டால் அவை மந்திரிக்கப்பட்ட தகடுகளைப் போல் வேலை செய்யும் என்பதைச் சித்தர்கள் அறிந்திருந்தனர். சமீபத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சித்தர் இலக்கியங்களைப் பற்றி ஆராய்ந்து வெளியிட்டுள்ள நூல்களில் இந்தச் சக்கரங்கள் காணப்படு கின்றன. சித்தர்களால் உண்டாக்கப்பட்டவை என்பது ஒன்றே இந்த எண் சக்கரங்களின் பெருமையையும் மகிமையையும் விளக்குவதற்குப் போதுமானதாகும்.

நவக்கிரகங்களுக்கு மட்டுமல்லாமல் நாம் வணங்கும் தெய்வங்களுக்கும் உரிய எண் சக்கரங்களைச் சித்தர்கள் வகுத்துள்ளனர்.

எண் சக்கரங்கள் பெரும்பாலும் பார்வையில் ஒளி ஊட்டுவதற்கே எனலாம். பார்வையால் பார்த்துக் கொண்டே இறைவனின் திருநாமத்தை உச்சரிக்கும் போது நன்மைகள் உண்டாகும். நம்மைச் சூழ்ந்துள்ள தீயசக்திகள் விலகிப் போகும் நமது ஆன்மீக சக்தியும் வளரும். இதுதான் சித்தர்களின் லட்சியம்.

எண்களைக் கொண்ட சக்கரங்களைப் போட்டு அதைப் பார்த்துக் கொண்டே குறிப்பிட்ட கிரகத்தின் அருள் பெற பிரார்த்தனை செய்து வந்தால் நன்மை கிடைக்கும். உருவப் படங்கள், சிலைகளைவிட இவற்றுக்கு வலிமை அதிகம். ஆயினும் எண் சக்கர வழிபாட்டால் நன்மை களைப் பெற முடியுமே தவிர வேறு காரியங்களைச் செய்ய முடியாது. அதனால் செய்வினை, கெடுதல்கள், மாந்திரி

போன்ற பிறருக்கு கெடுதல் செய்யும் காரியங்களுக்கு இந்த எண் சக்கரங்கள் போட்டு மந்திரம் சொல்வதால் பலன் கிடையாது.

இந்த எண் சக்கரங்களை வைத்து வழிபடும்போது நைவேத்தியம்—பிரசாதம் போன்றவைகள் வைப்பதும் கொடுப்பதும்கூடாது. தனது காரிய சித்திக்காகத் தனிமையில் செய்யும் பிரார்த்தனை எனலாம்.

—:—


சக்தி விநாயகர் யந்திரம்

சித்தர்களின் ஓலைச் சுவடிகளிலிருந்து எடுக்கப்பட்ட இந்த அபூர்வமான யந்திரத்தைப் பாருங்கள். யந்திரத்தின் மையத்தில் உள்ள வித்தான எழுத்துக்களைத் தவிர (பீஜாக்ஷரங்கள்) மற்றவை எல்லாம் எண்களே.

அறு கோணச் சதுரத்திலும் அதைச் சுற்றிலும் அமைந்துள்ள வட்டம், எட்டிதழ் தாமரை. அதைச் சூழ்ந்து யந்திர பீடம் போல் அமைந்துள்ள சதுரம்—எல்லா இடங்களிலும் எண்களே இடம் பெற்றுள்ளன. எண்களை சக்கரத்தில் இந்த விதிப்படி அமைந்திருப்பதால் அது பூமியை சூழ்ந்துள்ள அணுக்கதிர்களிலிருந்து விநாயகப் பெருமானின் சக்தியை கிரகிக்கும் சக்தி பெற்றதாக உள்ளது.

எந்த காரியம் நிறைவேறுவதற்காக, செல்வ விருத்திக்காக, குடும்பத்தின் நல் வாழ்வுக்கும் மகிழ்ச்சிக்குமாக, பிள்ளைகளின் படிப்புக்காக, உத்தியோகம் அல்லது உத்தியோகத்தில் உயர்வு பெறுவதற்காக, திருமணம் ஆகாத இளைஞர்கள் கன்னிப் பெண்களுக்குத் திருமணமாவதற்காக—எந்தக் காரியத்திற்காக வேண்டுமானாலும்

இந்த யந்திரத்தை அமைத்து வழிபடலாம் வியாபார அபிவிருத்திக்காக வியாபார ஸ்தலங்களில் மாட்டலாம்.



யந்திரத்தை சுத்தமான தாமிரம், வெள்ளி அல்லது தங்கத் தகட்டில் எழுதிக்கொண்டு கண்ணாடி போட்டு பூஜை அறையில் மாட்டிடலாம், அல்லது உறுதியான தகடாக இருந்தால் அப்படியே பீடத்தின் மேல் வைத்தே வழிபடலாம். இலேசான பலகையில் பதித்தும் மாட்டலாம்.

யந்திரம் வைக்கப்படும் இடம் தூய்மையானதாக இருக்க வேண்டும். தனிமையில் தியானம் செய்ய

ஏற்றதாக இருக்க வேண்டும். யந்திரத்தின் எதிரில் பலகை அல்லது மான்தோல் போன்றவை போட்டு அதன் மேல் அமர்ந்தே தியானம் செய்யவேண்டும். வெறும் தரை மேல் அமர்ந்து தியானம் செய்வதால் தியான சக்தியின் ஒரு பகுதி பூமியில் ஆகர்ஷிக்கப்பட்டு விடுகிறது என்பதாலேயே பீடத்தின் மேல் அமர வேண்டும் என்று விதித்துள்ளார்கள்.

பத்மாசனத்தில் அமர்வது சிறப்பு, வயதானவர்கள் சுலபாசனத்தில் (சாதாரணமாக கால்களை மடித்து) அமர்ந்தும் தியானம் செய்யலாம். மனதை ஒருமுகப் படுத்தி புருவங்களின் மையம் மூலமாக, மூக்கின் நுனியின் மேல் பார்வையை நிறுத்தி விநாயகப் பெருமானைக் குறித்து தியானம் செய்ய வேண்டும் மூச்சுப் பயிற்சி உள்ளவர்கள் அதையும் பின்பற்றலாம்.

இவ்வளவு நேரம் தான் தியானம் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. சில நிமிஷங்களில் ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக அரை அல்லது ஒரு நாழிகை நேரம் தியானம் செய்கிற அளவுக்குக் கொண்டு வரலாம் மனம் ஒன்றிய நிலையில் சக்கரத்தின் மையத்தில் வேழ முகத்தினை ஒளிமயமாகக் காண முடியும்.

இன்ன மந்திரம் தான் சொல்லித் தியானம் செய்ய வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. வடமொழி மந்திரங்களையோ தமிழ்ப் பாடல்களையோ, ஏதாவது ஒரு மனதுக்குப் பிடித்த விநாயக ஸ்தோத்திரத்தைச் சொல்லலாம். அல்லது சக்தி விநாயகனே - சஞ்சலம் தீர்ப்பவனே- முக்தி யருள்பவனே - முக்கண்ணன் புதல்வா - கந்தனுக்கு மூத்தவனே - கரம் ஐந்துடையவனே மயக்கம் தீர்ப்பவனே வித்தகனே—மாலின் மருமகனே—வேழ முகத்தோனே— வித்தையும் புத்தியும் செல்வமும் சுகமும் தா. என் கஷ்டங்

களைத் தீர்த்து வை. கவலைகளை மாற்று என்று மன முருகப் பிரார்த்தனை செய்யலாம்.

விநாயகன் வினை தீர்ப்பான், வாழ்வில் வெற்றியைத் தருவான். கோரிய பயன் கை கூடச் செய்வான். அதில் சந்தேகமே வேண்டாம்.

சில துதிப் பாடல்கள் கீழே தரப்படுகின்றன. உங்களுக்கு எது பிடிக்கிறதோ அதைச் சொல்லித் துதிக்கலாம்.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புத்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருமூலர் திருமந்திரம்

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்-கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

—ஔவையார் (நல்வழி)

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

ஔவையார் (மூதுரை)

கைத்தல நிறைகனி அப்பமொ டவல் பொரி

அடிபேணிக்
கப்பிய கரிமுகன்

கற்றிடும் அடிவர் புத்தியிலுறைபவர்
கற்பக ஏனவினை ஆடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமி ழடை வினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவ னுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துய ரது கொடு சுப்பிர மணிபடும்
அப்புனம் அதனிடை இடமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

—அருணகிரி நாதர் (திருப்புகழ்)

—:—

தேவர்கள் செய்த துதி

தத்துவா தீத போற்றி தத்துவப் பொருளே போற்றி
தத்துவ முதலே போற்றி தத்துவ சொரூப போற்றி
தத்துவத் தியன்ற தாத்து விகங்களு மானாய் போற்றி
தத்துவ வறிவுக் கெட்டாத் தயங்குபே ரறிவே போற்றி.

உடலினுக் குயிரே போல வுயிர்க்குய ரானாய் போற்றி
யுடலுயிர்க் கறிவு நல்கி யுடலினைக் காப்பாய் போற்றி
யுடலுயி ரெனப்பி ரிங்கா வொற்றுமைப் பொருளே போற்றி
யுடலுறை யுயிர்க்கு மெட்டா வொளிப் பெருஞ்சோதி போற்றி

விரவுதத் துவத்தி னீங்கி மெலிவன வாவி
வாமுற வுருவு கொண்டு வந்தருள் குரவ போற்றி
பரவுமைந் தொழிலை நீக்கி யுயிரினைப் பணிப்பாய்
போற்றி
துரியத்தி னுயிரை வாங்குஞ் சுடர்ப் பெருங்கடலே
போற்றி
பக்தர்கள் வழங்கா நின்ற பலவுங்கைக் கொள்வாய்
போற்றி
புத்திகள் போகத் தார்க்குப் புணர்ந்தருள் போகி போற்றி
முக்தியை யோகத் தார்க்கு முடித்தருள் யோகி போற்றி
செயத் தொழி லவர்க்கு மந்தப் பயனரு ளிறைவ போற்றி.

வேண்டிய வடியார்க் கெல்லாம் விக்கினங் கெடுப்பாய்
போற்றி
வேண்டிவந்தனை செய்யார்க்கு விக்கினங் கொடுப்பாய்
போற்றி
வேண்டுவார் வேண்டிற் றெல்லாம் விளைத்தருள் விமல
போற்றி
மாண்ட துட்டர்களைக் கொல்லு மறமிகு மள்ள
போற்றி

—கச்சியப்ப சுவாமிகள்

—:—

பிருமன் முதலானோர் செய்த துதி

யாவன் ஒருவன் அயனொடுமால் அகிலாண்டமும்
ஈன்றெடுக்கின்றானை
யாவனொருவன் குணமாயும் இயம்பு மூவர் உருவாயும்
மேவு குணாதீ தனுமாயும் விளங்கா நின்றான்
அத்தகைய

தேவன் கமலத் தாளிணைக்குச் சிறியேம் வணக்கஞ்
செய்கின்றோம்.
யாவ னொருவன் அடியாரை எய்த்த இடத்திற்
புரக்கின்றான்
யாவனொருவன் தயித்தியரா லிளைவானவரை யளிக்
கின்றோன்
யாவனொருவன் வழிபடுவார் இடருக்கு இடரைப்
புரிகின்றான்
யாவன் நிகரிலா இறைவன் அவன்பொற்றாள்கள்
பணிகின்றாம்.

—கச்சியப்ப சுவாமிகள்

சித்தி விநாயகர் துதி

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கமெனுந்
தறிநிறுவி உறுதி யாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் தறுகட் பாசக்
கள்ளவினைப் பசுமோதக் கவளமிடக்
களித்துண்டு கருணை யென்னும்
வெள்ளமதப் பொழிசித்தி வேழத்தை
நினைந்து வரு வினைகள் தீர்ப்பாம்.
—பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடற் புராணம்)

விநாயகர் பஜனைக் கீர்த்தனம்

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்தியின் புத்திரனே சரிந்தவயிற்றோனே
முத்தியளிக்கின்ற முருகற்கு மூத்தோனே
வித்தையெனக் கருளும் வேலவற்கு மூத்தோனே,

திருவலமாம் மேற்படி தெற்கிசை வெட்பாலை
வெட்பாலைக்குள்ளிருக்கும் சப்பாணி பிள்ளையாரே
பொற் பாதம் நான் மறவேன் பொன்னுக் கணபதியே
பொன்னுக் கணபதியே பிரபலமாய் முன்னடவாய்

ஏறுதவறாமல் எழுத்தாணி சாயாமல்
கோடு தவறாமல் கொழுந்தோலை சாயாமல்
நாவு தவறாமல் நல்லோசை தாருமையா
குரலில் குடியிருந்து குரலோசை தாருமையா.

—புனந்திரன் தூது

ஏற்றப்பாடலில்

பிள்ளையாரே வாரும்
பிழைவராமல் காரும்
மழைவரக் கண்பாரும்
மகாதேவன் மகனே.

விக்கினரே வாரும்
சக்கரைக் கற்கண்டு
முக்கனியுந் தேனும்
முள்ளுடன் பிலாக்காய்.

முடிச்சுடன் கரும்பு
அதிரசம் வகைகள்
அவல் கடலை தேங்காய்
அப்பனே வுனக்கு.

ஒப்புடன் படைப்பேன்
உன்னைத் தொழுவோர்க்கு
எண்ணுந் துணை செய்வாய்
ஈச்வரன் தன் மகனே.

ஆலயங்களில் விநாயகர் துதி

கஜாநனம் பூதகணாதிஸேவிதம்
கபித்தஜம்பூ பலஸாரபக்ஷிதம்
உமாஸுதம் ஸோக விநாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்.

மூக்ஷிகவாஹன மோதகஹஸ்த
சாமரகர்ண விளம்பிதஸூத்ர
வாமனரூப மஹேச்வரபுத்ர
விக்கின விநாயக பாத நமஸ்தே.


மஞ்சள் விநாயகர் எண் எழுத்து யந்திரம்

சுபகாரியங்கள் எல்லாவற்றுக்கும் முதலில் மஞ்சள் தூளால் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூஜை செய்து ஆரம்பிக்கும் வழக்கம் நமது நாட்டில் தொன்று தொட்டு உள்ளது. மஞ்சள் பிள்ளையார் சுபத்தைச் செய்பவர். ஆயுள் ஆரோக்கியம் ஐஸ்வரியங்களை விருத்தி செய்யக்கூடியவர்.

சித்தர்கள் அருளியுள்ள இம் மஞ்சள் விநாயகர், எண் எழுத்துச் சக்கரத்தை நாள்தோறும் பூஜித்து வருவது இல்லறத்தில் உள்ளவர்களுக்கு அளவு கடந்த நன்மை தரும். நாடும் பிணி அகலும். நன்மைகள் கைகூடும். ஓடும் துன்பங்கள் கிரக பீடைகள் ஏவல் பில்லி சூனியங்கள் துர்த் தேவதைகள் இந்த யந்திரம் இருக்குமிடத்தை அணுகா. அவ்வளவு மகத்துவமும் சக்தியும் பொருந்திய யந்திரம் இது.

மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைக்கும் பொழுது பீடத்தின் மேல் இந்தச் சக்கரத்தை எழுதி வைத்து அதன் மேல் பிள்ளையாரை ஸ்தாபனம் செய்து பூஜிப்பது விசேஷம். தங்கம், வெள்ளி அல்லது தாமிரத் தகட்டில் யந்திரத்தை

எழுதி வைத்துக் கொண்டு நித்திய பூஜை செய்பவர்கள் அத் தகட்டின் முன்பாக மஞ்சள் பிள்ளையாரை வைத்து பூஜை செய்யலாம். வெள்ளை எருக்கன் வேரால் பிள்ளை யார் செய்து வைத்துப் பூஜை செய்வது மிகவும் சக்தியைக் கொடுக்கும். பொன், வெள்ளி, செம்பு, பளிங்கு, கருங்கல்



முதலியவற்றால் செய்யப்பட்ட உருவங்களை வைத்து அபிஷேகம் செய்து பூமாலை சூட்டி தூப தீப நைவேத்தியங் களுடன் பூஜை செய்யலாம். மஞ்சள் பிள்ளையார் செய்து வைத்துப் பூஜிப்பவர் அன்றாடம் புதிய பிள்ளையார்

செய்து வைத்து பூஜித்தபின் அன்றே தண்ணீரில் விட்டு விடுவது நல்லது.

ஓம்—ஸ்ரீம்—ஹ்ரீம்—க்லீம்—க்ஸௌம்—கம்—கணபதய வரவரத ஸர்வ ஜனமே வசமானய ஸ்வாஹா.

இம்மந்திரத்தை சொல்லக்கூடிய முறை (ஒரு தடவை)

ஓம் ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் க்ஸௌம் ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம்க் ஸௌவும் கம் கணபதயே
வரவரத ஸ்வாஹா
ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் கிலீம் க்ஸௌவும் கம்கணபதயே
வரவரத

சர்வ ஜனமே வசன்ய ஸ்வாஹா

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்ஸௌவும் கம்கணபதயயே
வரவர

சர்வஜனமே வசமானல ஸ்வாஹா

மொத்தம் பத்து தடவை சொல்லுவது ஒரு பூஜை அளவாக கணக்கிடப்படுகிறது.

பூஜை செய்யவும், யாகம் செய்யவும், அருச்சனை செய்யவும் சொல்கின்ற மந்திரங்கள்,

ஓம் சுமுகாய நம :
ஓம் ஏகதந்தாய நம :
ஓம் கபிலாய நம :
ஓம் கஜகர்ணிகாய நம :
ஓம் லம்பபோதராய நம :

ஓம் விகடயா நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் கணாபதியாய நம:
ஓம் தூமகேதுவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம:
ஓம் பாலசந்த்ராய நம:
ஓம் கஜாநநாய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்பகர்ணாய நம:
ஓம் ஏரம்பாய நம:
ஓம் ஸ்கந்தபூர்வதாய நம:
ஓம் மகாகணபதியே நம:

கலச மந்திரங்கள்

ஓம் ஹ்லாம் நிவிர்த்தி கலாயை நம:
ஓம் ஹ்லீம் பிரதிஷ்டா கலாயை நம:
ஓம் ஹ்ரீம் வித்தியா கலாயை நம:
ஓம் ஹ்யைம் சாந்தி கலாயை நம:
ஓம் ஹ: சாந்தியாதீத கலாயை நம:

பிரம்ம மந்திரங்கள்

ஓம் ஹொம் ஈசானமூர்த்தாய நம:
ஓம் ஹெம் தத்புருஷ வக்த்ராய நம:
ஓம் ஹீம் அகோர ஹ்ருதய நம:
ஓம் ஹிம் வாமதேவ குஷ்யாய நம:
ஓம் ஹம் சத்யோகாத மூர்த்தயே நம:

விடங்கமந்திரங்கள்

ஓம் ஹாம் ஹ்ருதயாய நம:
ஓம் ஹீம் சிரசே நம:

ஓம் ஹூம் சிகாயை நம :
ஓம் ஹைம் கவசாயை நம :
ஓம் ஹௌம் நேத்ரேப்யோ நம :
ஓம் ஹௌம் அஸ்த்ராய நம :

விநாயக கவசம்

கச்சியப்ப முனிவர் தமிழில் விநாயக கவசம் என்னும் நூலை எழுதியுள்ளார் இதை ஓதி வந்தால் நோய், வறுமை, பேய், பூதம், ஏவல் முதலியவை விலகும். மனக்கவலை நீங்கும்.

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர்
காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந்தர தேகம் மதோற்கடர் தாம்
அமர்ந்து காக்க
விளர்அரு நெற்றியை என்றும் விளங்கிய காசிபர்
காக்கப் புருவம் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்கத் தடவிழிகள்
பாலசந்திரனார் காக்க
கவின் அதரம் கசமுகனார் காக்கத் தாலம்
கணக்கிரீடர் காக்க
நவில் சிபுகம் கிரிசைசுதர் காக்க நனிவாக்கை
விநாயகர்தாம் காக்க
அவிர் நகை துன்முகர் காக்க வள்எழில்
செஞ்செவி பாசபாணி காக்க
தவிர்தல்உறாது இளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சிந்திதார்த்தர் காக்க
காமரு பூ முகம்தன்னைக் குணேசர் நனிகாக்க
களம் கணேசர் காக்க
வாமம்உறும் இருதோளும் வயங்குகந்த பூர்வசர்
தாம்மகிழ்ந்து காக்க
ஏமம்உறு மணிமுலை விக்கின விநாசன்
காக்க இதயந்தன்னைத்

தோம் அகலும் கணநாதர் காக்க வகட்டினைத்
துலங்குஏரம்பர் காக்க
பக்க மிரண்டையுந்தராதரர் காக்கப்பிருட்டத்தைப்
பாவநீக்கும்
விக்கின கரன் காக்க விளங்கு இலிங்கம்
வியாளபூடணர்தாம் காக்க
தக்ககுய்யந்தன்னை வக்கிரதுண்டர் காக்க
சகனத்தை அல்ல
லுக்காணபன் காக்க ஊருவை மங்கள
மூர்த்திஉவந்து காக்க
தாழ்முழந்தாள் மகாபுத்திகாக்க இருபதம் ஏகதந்தர் காக்க
வாழ் சுரங்கிப் பிரப் பிரசாதனர் காக்க முன்கையை
வணங்குவதோ
யாழ் தரச்செய்யாசா பூரகர்காக்க விரல்பதும வத்தர்காக்க
கேழ்கிளருநகங்கள் விநாயகர் காக்கக் கிழக்கினில்
புத்தீசர் காக்க
அக்கினியில் சித்தீசர்காக்க வுமாபுத்திரர் தென்திசை காக்க
மிக்க நிருதி யிற்கணேசுரர் காக்க விக்கின்வர்த்த
னர்மேற்கென்னும்
திக்கதனில் காக்க வாயுவில் கசகன்னன் காக்கத் திகழுதீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில் அசநந்தனரே காக்க
ஏகதந்தர் பகல் முழுதும் காக்க இரவினும் சந்தி
இரண்டன் மாட்டு
மோகையின் விக்கினகிருது காக்க இராக்கதர்
பூதம்உறு வேதாள
மோகினி பேய் இவையாதி உயிர்த்திறக்கால் வரும்
துயரும் முடிவிலாத

வேகமுறு பிணிபலவும் விலக்குபு பாசாங்குசர்தாம்
விரைந்து காக்க
மதிஞானந் தவந்தான மானமொளி புகழ்குலவண்
சரீர முற்றும்
பதிவான தனம்தானி யம்கிரகம் மனைவிமைந்தர்
பயில்நடை பாதிக்
கதியா வுங்கலந்து சர்வாயுதர் காக்க காமர்பவுத்
திரர் முன்னான்
விதியாரும் சுற்றம்எலாம் மயூரேசர் எஞ்ஞான்றும்
வரும்பீக் காக்க
வென்றி சீவிதம் கபிலர் காக்க கரியாதி
எலாம் விகடர் காக்க
வென்று இவ்வாறு இதுதனை முக்காலமும்
ஓதிடினும்பால் இடையூறு ஒன்றும்
ஒன்றுஉரு முனிவரகாள் அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்ற அங்குஅவர்தேகம் பிணியற வச்சிரதேத
மாகி மின்னும்

—!—

நவக்கிரகங்கள்

சூரியன் முதலான கிரகங்களின் கதிர்கள் நமது பூமியிலுள்ள ஒவ்வொரு அணுவையும் கட்டுப்படுத்து கின்றன என்பதை முன்பே கூறினோம். சூரியனையும் இங்கு ஒரு கிரகமாகச் சேர்த்துக் கொண்டதன் காரணம் சூரிய ரேகைகளும், மற்ற கிரகங்களின் ரேகைகளோடு கலந்து உறவாடி பூமியிலுள்ள சகல அணுக்களையும் கட்டுப்படுத்துகின்றன என்பதனால்தான். இதிலிருந்து பூமியிலுள்ள ஒவ்வொரு பிராணியின் விதியையும், நவக்கிரகங்களே நிர்ணயிக்கின்றன. மாந்தரின் விதியை யும் அவையே உருவாக்குகின்றன என்பதை திண்ணமாக அறியலாம்.

மனிதனுடைய மனதை ஆட்சி செய்வது சந்திரன். ஜோதிஷத்தில் சந்திரனுக்கு மனஸ்காரகன் என்று பெயர். சந்திரன் மனித மனத்தை ஆட்சி செய்கிறான், மனிதனின் அறிவு, புத்தி, செயல், தொழில், குடும்பம். குழந்தைகள், பொருளாதாரம், வாகனம், வீடு, நோய் நொடிகள் இன்னும் வாழ்க்கை சம்மந்தப்பட்ட சகல பிரச்சனைகளுக்கும் உயர்வு தாழ்வு எல்லாவற்றுக்குமே நவக்கிரகங்களே காரணம்.

வலது கண், மூக்கு முதலாக உடலின் வலது பகுதியை சூரியன் ஆதிக்கம் செய்வதாகவும், இடது கண், இடது மூக்கு முதலான இடது பகுதியை சந்திரன் ஆட்சி செய்வதாகவும் குறிப்பிடுகின்றனர். அதனாலேயே சித்தர்கள் வலது பக்கமாக வாங்கும் மூச்சை சூரிய கலை சூரிய நாடி என்றும், இடதுபக்க மூச்சை சந்திரக்கலை, சந்திர நாடி என்றும் குறிப்பிட்டனர். நவக்கிரகங்களுக்கென்று பொதுவான எண் சக்கரம் எதுவும்இல்லையென்றாலும் நவக்கிரகங்களின் படத்தைவைத்து பூஜை செய்பவர்கள் அல்லது கோவில்களில் நவக்கிரகங்களைச் சுற்றும் போது இந்த நவக்கிரஹ ஸ்தோத்திரத்தை தியானம் செய்ய பயன்படுத்தலாம்.

நவக்கிரஹ ஸ்தோத்திரம்

பாஸ்வான் மே பாஸயேத் தத்துவம்
சந்தர ஸ்சாஹலாத க்ருத் பவேத்
மங்களேச மங்களம் தத்யாத்
புதஸ் ச புத தாம் திசேத்
குரூர் மே குருதாம் த்யாத்
கவிஸ்ச கவிதாம் திசேத்
சனிஸ்ச சம் ப்ராபயது கேது:
கேதும் ஜயே Sர் பயேத்

ராஹூர் மேரா ஹயேத் ரோமம்
க்ரஹாஸ் ஸந்து கரக்ரஹா
நவம் நவம் மசைச்வர்யம்
தி சந்த் வேதே நவக்ரஹா :

இதன் பொருள் :

சூரியன் ஞான ஒளி வீசச் செய்க. சந்திரன் மகிழ்ச்சி பெருகச் செய்க. மங்கள சொரூபியான அங்காரகன் எனது வாழ்க்கையில் மங்களம் உண்டாகச் செய்யட்டும். புதன் அறிவு விசாலமாக உதவுக. குரு பகவான் பெருமை தருக. சுக்கிரன் கவித்துவத்தையும் சனிபகவான் சுகத்தையும் அளிப்பவர்களாகுக. கேது வெற்றியைத் தருக. ராகு நோய் நொடிகளை நீக்கி ஆரோக்கியம் பெருகச் செய்யட்டும். நவக்கிரகங்களும் எனக்கு நன்மை தருபவர்களாகட்டும். செல்வம் பெருகட்டும். நற்குணங்களையுடைய சூரிய பகவானின் புத்திரனாகிய சனிபகவான் எனது துன்பங் களைப் போக்கி ஆசைகள் நிறைவேறச் செய்வாராக.

சத்ருணாம் நிக்ரஹாயச
வாதி ராஜயதி ப்ரோக்தம்
க்ர ஹஸ் தோத்திரம்
ஸதாபடேத்.

நவக்கிரகங்கள் அனுக்கிரக மூர்த்திகளாக நன்மைகள் உண்டாகச் செய்யவும், சத்துருக்கள் அழியவும், நோய் நொடி பகையின்றி நல்வாழ்க்கை அமையவும், வாதி ராஜயதி என்பவரால் செய்யப்பட்ட இந்த நவக்கிரக ஸ்தோத்திரத்தை தியானம் செய்பவர்கள் சகல நன்மை களும் பெறுவார்கள்.

—:—

நவக்கிரக எண் கவசம்

நவக்கிரக தோஷ நிவர்த்திக்காக சித்தர்கள் அடியிற் கண்ட எண் கவசத்தை வழங்கியுள்ளனர். இதை பஞ்ச லோகத் தகட்டில் பதிய வேண்டும். பஞ்சலோகம் என்பது தாமிரத் தகட்டில் பொன், வெள்ளி இரும்பு, ஈயம் முதலிய உலோகங்களை ஆங்காங்கு இழையச் செய்து ஐந்து லோகங்களும் கலந்த தகடாகச் செய்வது. மாந்திரீகர்கள் முக்கியமான எந்திரங்களுக்கு பஞ்சலோகத் தகடுகளை உபயோகிப்பது வழக்கம். இங்கே நவக்கிரகங்களுக்கும் பொதுவான எண் யந்திரம் அமைக்க வேண்டி இருப்பதால் பஞ்சலோகத் தகட்டையே உபயோகிப்பது நல்லது.

போட்டி 62

23	30.	2	7.
6.	3.	27	26
29.	24	8	1
4	5	25	28.

சம சதுரத் தகட்டில் இம்மாதிரியான எந்திரம் அமைத்து தினசரி பூஜை செய்யலாம். அல்லது தனிசமாக வெள்ளித் தாயத்தில் அடைத்து கை அல்லது இடுப்பில் கட்டிக் கொள்ளலாம். இந்த தாயத்தை கிரகண காலத்தில் அல்லது அமாவாசை வருகிற ஞாயிற்றுக்கிழமையில் தயார்செய்வது நல்லது. இஷ்ட தெய்வத்தை தியானித்து

நவக்கிரகங்களையும் பிரார்த்தனை செய்து கொண்டு குளிசமாகக் கட்டிக் கொள்ளலாம்.

இந்த எந்திரம் நவக்கிரகங்களாலும் ஏற்படக்கூடிய தோஷங்களைக் குறைத்து ஆரோக்கியத்தை உண்டாக்கும். வசீகர சக்தியைக் கொடுக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி பெற உதவும்.

—:—

சூரியன்

நவக்கிரகங்களிலே மிகவும் சக்தி வாய்ந்தவர் சூரியன். சூரியனின் கதிர்கள் வலு மிகுந்தவை. சூரியன் ஜாதகத்தில் நன்மை செய்பவராக அமையும் பொழுது நல்ல தந்தை அமைவார். தந்தையால் மகிழ்ச்சியும் நன்மைகளும் உண்டாகும். அவரால் செல்வமும் (அதாவது பித்ரு பாக்யம்) உண்டாகும்.

ஜாதகர் அரசாங்கத்தாலும் நன்மை பெறுவார். மனோதைரியம் உடையவராகவும், நல்ல ஆரோக்கியம் உடையவராகவும், தேஜஸோடும் வீர பராக்கிரமம் உடைய வராவும், இருப்பார். அதிக சிரமப்படாமல் தன லாபங் களை அடைவார். வெளியூர்களில் பிரயாணம் செய்து பல பேர்களுடைய அன்பையும் ஆதரவையும், பெருமையையும் பெறுவார். பட்டம் பதவிகள், வாகன சுகம் முதலான வற்றையும் அடைவார்,

ஜாதகத்தில் சூரியன பலவீனமாகவோ, அல்லது ஜாதகருக்குக் கெடுதல் செய்பவராகவோ அமைந்து விட்டால் அந்த ஜாதகருக்கு தந்தையால் சுகம் இராது.

தந்தையுடன் விரோதம், தந்தை மரணம், தந்தையின் சொத்துக்கள் நாசமடைதல் போன்றவை ஏற்படலாம்.

அரசாங்க விரோதியாவார். அரச தண்டனை பெறவும் நேரலாம், வரவுக்கு மீறிய செலவுகளாலும், அடிக்கடி இடம் மாற வேண்டிய நிர்ப்பந்தங்களாலும் துன்பங்கள் உண்டாகும். உயர்ந்த நிலையில் உள்ளவர்களுடன் பகை ஏற்படும். தொழிலில் கவனக்குறைவால் பொருள் நஷ்டம், அவமானம் ஏற்படக் கூடும். வீணான மனக்கவலைகள், பயம், உடல் நலக் குறைவு போன்றவையும் ஏற்படலாம். மேலும் சூரியன் மனித தேகத்தில் எலும்புகளுக்கு ஆதிக்கம் வகிப்பவராவதால் சூரியன் நன்றாக அமையாவிட்டால் தேகபலம் குறையும். அதாவது எலும்புகள் சக்தியற்றவை யாக இருக்கும்.

சூரியனுக்குரிய எண் யந்திரம்

மேற்கத்திய எண் ஜோதிஷத்தின்படி சூரியனுக்குரிய எண் நான்கு, இங்கே நான்கு கட்டங்கள் அமைந்துள்ளன, நான்கு கட்டங்களிலுள்ள எண்களையும் நேராகவோ, மேலிருந்து கீழாகவோ, அல்லது ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு குறுக்காகவோ எப்படிக் கூட்டி னாலும் முப்பத்தி நான்கு வரும். மூன்றும் நான்கும் ஏழு— ஒன்று, நான்கு, ஏழு இவை மூன்றும் ஒரே கிரகத்தின் சார்புடைய எண்கள், எனவே சித்தர்கள் கூறியுள்ள இந்த எண் சக்கரம் மேற்கத்திய நியூமராலஜிக்கும் மிகவும் பொருத்தமாக இருப்பதை அறியலாம்.

இந்த எந்திரத்தை சூரியனுக்குரிய உலோகமாகிய தங்கத் தகட்டில் வரைவதே உத்தமம். பெரியதாக வரைய வேண்டும் என்று அவசியமில்லை, சிறியதாக இருந்தாலும்

போதும். அல்லது தாமிரத் தகட்டிலும் வரைந்து கொள்ளலாம்.

கோச்சார ரீதியாக சூரியன் ஜாதகருக்கு நன்மை செய்யக் கூடியவராக இருக்கும் காலத்தில் ஞாயிற்றுக் கிழமையில் சூரிய ஓரையில் இந்த எந்திரத்தை வைத்து தியானம் செய்யத் தொடங்க வேண்டும். எந்திரத்தை மேற்கூறிய மாதிரி கிரகம், நாள், ஓரை அமைந்துள்ள போது வரைந்து கொள்வதும் நல்லது.

சூரியன்.

4	14	15	1
9.	7.	6	12
5	11	10	8
16	2	3	13

சூரியன் ஜென்ம ராசியிலிருந்து (சந்திரன் இருக்குமிடத்திலிருந்து) மூன்று, ஆறு, பத்து, பதினொன்றாமிடங்களில் சஞ்சரிக்கும் காலங்களில் கோச்சார ரீதியாக நன்மை செய்வார்.

ஜாதகத்தில் சூரியன்

உங்கள் ஜாதகத்திற்கு சூரியன் நல்லவரா கெட்டவரா என்பதை அறிந்து கொள்ள வழி ஜென்ம லக்னத்திலிருந்து சூரியன் எந்த ஸ்தானத்தில் இருக்கிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். சூரியன் பகை—நீச்ச ஸ்தானங்களில்

அமையாமலும், பகை நீச்ச நவாம்சங்கள் பெறாமலும் இருக்க வேண்டும். ஆறு எட்டு பனிரெண்டில் மறையாம லிருக்க வேண்டும். பகை கிரகங்களான சனி, இராகு, கேதுவோடு சேராமல் இருக்க வேண்டும். அப்படியிருந்து சுபகிரகங்களால் பார்க்கப்பட்டும் இருந்தால் சூரியன் உங்களுக்கு நன்மை செய்யக் கூடியவர் என்று தெரிந்து கொள்ளலாம்.

மேலே கண்ட எந்திரத்தை வைத்துத் தியானம் செய்வதால் சூரியன் உங்களுக்கு நன்மை செய்பவராக இருந்தால் அமோகமான நன்மைகளைச் செய்வார், கெடுதல் செய்யக் கூடியவராகயிருந்தால் தன் தீய பலன் களைக் குறைத்துக் கொள்வார்.

பொதுவாக சூரிய திசை நடைபெறும் காலத்தில் தினசரி சூரிய நமஸ்காரம் செய்து வருவது நன்மையுண் டாகும். ஆற்றிலோ, குளத்திலோ குளித்துவிட்டு விபூதி அணிந்து கிழக்கே சூரியனைப் பார்த்து நின்று இரு கைகளையும் தலைக்கு மேலே உயரத் தூக்கி சூரிய நமஸ்காரம் செய்வது முறை. அப்போது மூச்சையடக்கி கும்பகம் செய்வது மிகவும் விசேஷம், வீடுகளிலும் சூரியனைப் பார்த்து நமஸ்காரம் செய்யலாம். சூரியனுக் குரிய சதநாமாவளி, அஷ்டோத்திரம் முதலானவற்றைச் சொல்லிக் கொண்டு ஒவ்வொரு நாமத்திற்கும் ஒரு தடவை யாக சாஷ்டாங்கமாக பூமியில் விழுந்து வணங்குவது சூரியனால் உண்டாகும் தோஷங்களுக்குப் பரிகாரமாகும்.

சூரியாஷ்டகம்

சூரியனைக் குறித்த ஸ்தோத்திரங்கள் பல உள்ளன அகஸ்தியர் ஸ்ரீராமனுக்கு உபதேசித்த 'ஆதித்ய ஹ்ருதயம்' மிகவும் பிரசித்தமானது.

சூரியாஷ்டகம்

ஆதிதேவ நமஸ் துப்யம் ப்ரஸித மம பாஸ்கர
திவாகர நமஸ் துப்யம் ப்ரபாகர நமோஸ்துதே
ஸப்தாச்வ ரதமாருடம் ஸர்வ லோக பிதாமஹம்
ச்வேத பத்ம தரம் தேவம் தம் சூர்யம் ப்ரணமாம்யஹம்
லோஹிதம ரதமாருடம் ஸர்வ லோக பிதாமஹம்
மஹா பாபஹரம் தேவம் தம்ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
த்ரைகுண்யச்ச மஹா சூரம் ப்ரும்ம விஷ்ணு மஹேச்வரம்
மஹாபாப ஹரம் தேவம்தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
ப்ரும்ஹிதம் தேஜ: புஞ்ஜஞ்ச வாயுராகாச மேவச
ப்ரபுஸ் த்வம் ஸர்வ லோகானாம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்

பந்தூக புஷ்ப ஸங்காஸம் ஹாரகுண்டல பூஷிதம்
ஏகசக்ர: ரதம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
தம்ஸூர்யம் லோக கர்த்தாரம் மஹாதேஜ: ப்ரதீபநம்
மஹா பாபஹரம் தேவம் தம் ஸூர்யம் ப்ரணமாம்யஹம்
தம்ஸூர்யம் ஜகதாம் ஞானப்ராகாச மோக்ஷதம்
மஹா பாபஹரம் தேவம் தம்ஸூர்யம் ப்ரணமாம்யஹம்

சூரிய காயத்ரீ

அச்வ த்வாஜாய வித்மஹே பாசஹஸ்தாய தீமஹி
தன்னோ சூரிய: ப்ரசோதயாத்

—:—

தியான ஸ்லோகம்

சூரியன் தீயபலன்களைத் தரக்கூடியவராக இருந்து அவரது திசை நடக்கும் காலத்தில் ருத்ராபிஷேகம் செய்வதும், கோதுமை, பொன் தானம் தருவதும் நன்மை உண்டாக்கும். அதோடும் சூரியமந்திரத்தை 6000 முறை ஜபம் செய்யவும் வேண்டும்.

த்விபுஜம் பத்ம ஹஸ்தம் வரதம் மகுடான் விதம்
தியாயே திவாகரம் தேவம் சர்வாபீஷ்ட பலப் ரதம்

என்ற தியான ஸ்லோகத்தைப் பலமுறை கூறி தியானம் செய்வது ரோக நிவாரணமளிக்கும்.

ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரௌம் ச: சூர்யாயநம:

என்ற மந்திரத்தை ஆறாயிரம் முறை ஜெபிக்கவேண்டும். சூரியனுக்குரிய எண் சக்கரத்தின் முன் அமர்ந்து இந்த மந்திர ஜெபம் செய்வதும் விசேஷம். சூரியன் தன்னை எந்திர ரூபமாக ஸ்தாபனம் செய்து கொண்டு விளங்கும் சூரியனார் கோவிலில் (கும்பகோணத்திற்கருகில் உள்ளது) அமர்ந்து பக்தி சிரத்தையோடு இந்த மந்திரத்தை ஜெபிப்பது அமோகமான பலனை அளிக்கும்.

சூரியனுக்குரிய உலோகம், தங்கம், ரத்னம், மாணிக்கம். நிறம் சிவப்பு சற்று மங்கலானது. தான்யம் கோதுமை.

சந்திர சக்கரம்

ஏழு கட்டங்கள் வரும்படியாக குறுக்காக எட்டுக் கோடும், நெடுக்காக எட்டுக்கோடும் வரைந்து சதுரமாக வரும்படி சக்ரத்தை அமைக்க வேண்டும். அதில் ஒன்று

முதல் நாற்பத்தி ஒன்பது வரை உள்ள எண்ணை கீழே உள்ள சக்கரத்தில் உள்ளபடி அமைக்க வேண்டும்.

சந்திரன்: 175

22	47	16	41	10	35.	4
5.	23	48	17	42	11	29
30	6	24	49	18	36	12
13	31	7	25.	43	19	37.
38	14	32	1	26	44	20
21	39.	8	33	2.	27	45.
46	15	40	9.	34	3	28

மேல் நாட்டு முறைப்படி சந்திரனுக்குரிய எண் ஏழு இங்கே ஏழு கட்டங்களில் எண்கள் அடைக்கப்படுகின்றன.

குறுக்காக, மேலிருந்து கீழாக அல்லது நெடுக்காக எப்படிக் கூட்டினாலும் மொத்தம் 175. ஒன்று ஏழு ஐந்தைக் கூட்டினால் பதின்மூன்று. மீண்டும் ஒன்று மூன்றைக் கூட்டினால் நான்கு வரும். நான்கு சூரியனுக்குரிய எண்.

சந்திரனுக்குரிய பீடத்தை, கட்டங்களாக அமைத்து சூரியனுக்குரிய எண் கூட்டு மொத்தமாக வரும்படி

சக்கரத்தை அமைத்தது சூரியனுடைய ஒளியால் சந்திரன் பிரகாசிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

சித்தர்களே மேல்நாட்டு எண் சோதிடத்துக்கும் மூல ஆசிரியர்கள் என்பது இதனால் விளங்குகிறது அல்லவா?

சந்திரனுக்குரிய இந்த எந்திரத்தை வெள்ளி தகட்டில் எழுதுவதே விசேஷம். முன் கூறியபடி பலகையில் பதிய வைத்தோ, கண்ணாடி போட்டுப் படமாகவோ மாட்டிக் கொள்ளலாம். அல்லது குளிசமாகவும் கட்டிக்கொள்ளலாம்.

சந்திர பகவானைக் குறித்து தியானம் செய்வதற்காகச் சக்கரம் அமைப்பவர்கள் படமாக பூஜை அறையில் நடு மையத்தில் மாட்டிவைப்பது நல்லது. நித்தியக்கடன்களை முடிந்தபின் குளித்து விபூதி குங்குமம் அல்லது நாமம் தரித்துக்கொண்டு தீபம் ஏற்றிவைத்து சக்கரத்தின் எதிராக அமர்ந்து மனதை ஒருமுகப்படுத்தி சந்திரபகவானைக் குறித்து தியானம் செய்யவேண்டும்.

சந்திரபகவான் ஜாதகத்தில் நல்ல நிலைமையில் அமைந்துள்ளவர்களுக்கு சந்திரதிசைக்காலத்தில் விசேஷமான யோக பலன்களை அளிக்கும், சந்திரன் தீயபலன்களைத் தருபவராக இருந்து அவரால் துன்பங்கள், கஷடங்கள் ஏற்படக்கூடிய நிலைமை இருந்தால் இந்த எந்திரத்தை நோக்கித் தியானம் செய்வதால் சந்திரனால் ஏற்படும் துன்பங்கள் குறைந்து நன்மைகள் உண்டாகும்.

சந்திரனால் ஏற்படும் நன்மைகள்

சந்திரன் மாத்ருகாரகனாகையால் தாயால் ஏற்படும் நன்மைகளும், சுகங்களும் தாயாருக்கு நன்மை, சுக வாழ்க்கை உண்டாவதும் சந்திரன் நல்ல விதமாக அமைந்

திருப்பதனாலேயே ஏற்படுகிறது. சந்திரன் மனஸ்காரக னாகையால் வாழ்க்கையில் திருப்தியும். வியாபாரலாப மும், குடும்ப சுகமும் ஏற்பட்டு மனத்தில் அமைதியும் சந்தோஷமும் உண்டாவதும் சந்திரனையே பொருத்திருக் கிறது. சுவையான உணவு, இனிமையான பானங்கள், இனிப்பு சுவையுள்ள கனிகள், பதார்த்தங்கள், இவற்றை அடையவும் சந்திரன் நன்றாக இருக்க வேண்டியது அவசியம். உடலில் வலிவும், நோயற்ற வாழ்வும், ஆடை யாபரணங்கள் சேர்வது, நல்ல பந்துக்கள். நண்பர்கள் அமைவதும், சுபகாரியங்களில் மற்றவர்களோடு கூடி மகிழ்ந்து உல்லாசமாக இருப்பதும், அழகான வசதியுள்ள வீடு, தோட்டம் அமைவதும் சந்திரனால் ஏற்படும் நற் பலன்களேயாகும்.

சூரியனை நாள்தோறும் பார்க்கிறோம். ஆயினும் ஆஹா! சூரியன் எவ்வளவு அழகாக இருக்கிறது பார் என்று புகழும்படியான சந்தர்ப்பம் எப்போதும் ஏற்படுவ தில்லை. ஆனால் சந்திரன் மாதத்தில் சில நாட்களே குளிர்ந்த ஒளியைத் தருகிறது. என்றாலும் அதன் ஒளி யையும் சந்தோஷத்தையும் நன்கு அனுபித்துப் புகழ் கிறோம். அதே போல் கலைஞர்கள் முதலானவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் புகழ் உச்சியில் இருக்கும் காலம் எப்போது என்று பார்த்தால் அது நல்ல விதமாக அமைந்த சந்திர திசைக் காலமாகவே இருக்கும். எத்துறை யினாலும் புகழ் பெற வேண்டுமானால் சந்திரன் நன்றாக அமைய வேண்டும்.

தவிர தென்னை, வாழை போன்ற பயிர்களால் உண்டாகும் லாபம் கப்பல் வியாபாரம், வெளிநாடுகளுடன் வியாபாரம், பந்தயம், லாட்டரி, பங்கு வாங்கி விற்றல், காண்ட்ராக்டுகள் போன்றவற்றில் லாபம் அடைவதும் சந்திரன் நன்றாக அமைந்திருப்பதைப் பொறுத்தே ஏற்படும்.

சந்திரனால் ஏற்படும் தீயபலன்கள்

ஒரு ஜாதகத்தில் சந்திரன் கெட்டுப் போயிருந்தால் தாயாருக்குக் கெடுதல். தாயினால் சுகமில்லாமல் போதல், தாய்க்குக் கண்டம் அல்லது மரணம் சம்பவித்தல், தாய் மாமன்மார்க்குக் கெடுதல் அல்லது அவர்களால் தொல்லைகள், நீர் சம்பந்தமான நோய்கள், பாண்டு ரோகம், பெண்களுக்குக் கர்ப்பாசயம் சம்பந்தமான ரோகங்கள், இருதயநோய், இருமல் சம்பந்தமான நோய்கள், துர்த்தேவதைகளால் பீடிக்கப்படுதல், கெட்ட பெண்களால் பொருள் விரயம், அவமானம், தண்ணீரால் அபாயம், வியாபார நஷ்டம், போட்டி, பந்தயங்கள் லாட்டரி போன்றவற்றில் நஷ்டங்கள், அந்நியரால் ஏமாற்றமடைந்து துன்பத்திற்கு ஆளாக நேர்தல், மனைவி மக்கள் விரோதம், சில சமயங்களில் தற்கொலைச் சிந்தனை, காமாலை, க்ஷயரோகம் போன்ற நோய்களால் துன்பம் ஏற்படலாம். இவற்றில் மற்ற கிரகங்களுக்கும் சம்பந்தம் இருக்குமென்றாலும் சந்திரன் மட்டுமே அந்தக் கிரகங்களின் பலன்களையும் சேர்த்துக் கொடுக்கக் கூடிய வனாகையால் சந்திர திசையை முக்கியமாகக் கவனிக்க வேண்டியதாகிறது.

அவரவர் ஜாதக பலத்தைப் பொறுத்து அதற்குத் தக்கபடி என்ன பரிகாரம் செய்யவேண்டுமோ அதைச் செய்வது நல்லதென்றாலும் சந்திரனுக்குரிய தேவதை அம்பாள் ஆகையால் சிவாலய பிரதக்ஷணம் செய்து அம்மனை வழிபட்டு வருதல் நல்லது. சந்திரன் தன்னை யந்திர ரூபமாக திருமலை ஸ்ரீ வெங்கடேசப் பெருமானின் திருவடிகளில் ஸ்தாபிதம் செய்து கொண்டிருப்பதால் திருமலை யாத்திரையும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானை வழிபட்டு வருவதும் நன்மை உண்டாக்கும்.

சந்திராஷ்டா விம்சதி நாம ஸ்தோத்திரம்

சந்த்ரஸ்ய ச்ருணு நாமானி சுபதானி மஹீபதே!
யானி ச்ருத்வா நரோ துக்கான் முச்யதே நாத்ர ஸம்சய
ஸுதா கரோவிது: ஸோமோ க்லெளரப்ஜ: குமுத ப்ரிய:
லோகப்ரிய: சுப்ர பானுஸ் சந்த்ரமா ரோஹிணீபதி:
சசீ ஹிமகரோ ராஜா த்விஜராஜோ திசாகர:
ஆத்ரேய இந்து: சீதாம் சுரோஷ தீச: கலா நிதி:
ஜைவாத்ருகோ ராமப்ராதா க்ஷீரோதர்ண வஸம்பவ
நக்ஷத்ர நாயக: சம்பு சிரஸ் சூடா மணிர் விபு:
தாப ஹர்தா நபோ தீபோ நாமான் யேதானிய: படேத்!
ப்ரத்யஹம் பக்தி ஸம்யுக்தஸ் தஸ்யபீடா விநக்யதி
தத்தினே ச படேத் யஸ்து லபேத் ஸர்வம் ஸகீஹதம்
க்ரஹாதீனாம ச ஸர்வேஷாம் பவேச் சந்தர பலம்
ஸதா!!

ஸ்ரீ சந்த்ராஷ்டா விம்சதிநாம ஸ்தோத்ரம்
ஸம்பூர்ணம்.

சந்திர காயத்ரீ

பத்ம த்வஜாய வித்மஹே ஹேம ரூபாய தீமஹி
தன்னோ ஸோம: பிரசோதயாத்

தியான ஸ்லோகம்

ஆரோக்கியம், தன லாபத்திற்கு சந்திரனைக் குறித்து தியானம் செய்வது. நல்லது. தியான ஸ்லோகம்

கதாதர தரம் தேவம் ஸ்வேத வர்ண நிசாகரம்
தியாயே தம்ருத சம்பூஷம் சர்வகாம பலப்ரதம்,

சந்திரன் தீய பலன்கள் தருபவராய் உள்ள காலத்தில் துர்க்கா பூஜை செய்து சந்திர ஜபம் செய்வது நலம்.

ஓம் ஸ்ராம் ஹ்ரீம் ஸ்ரௌம் ச: சந்திரமஸே நம

என்ற மந்திரத்தை பத்தாயிரம் முறை ஜெபிக்க வேண்டும். வெள்ளி, அரிசி, வஸ்திரம் முதலானவற்றைத் தானமாக வழங்க வேண்டும். மந்திர ஜெபம் தானம் முதலானவற்றை திருமலையில் செய்வது விசேஷம்.

அங்காரக சக்கரம்

மேற்கத்திய எண் சோதிட முறைப்படி அங்காரகனுக் குரிய எண் ஒன்பது. இங்கே ஒன்பது கட்டம் வரும்படியாக பத்துக்கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக சமசதுர வடிவத் தில் சக்கரத்தை வரைந்து கொள்ள வேண்டும். ஒன்று முதல் எண்பத்தொன்று வரை உள்ள எண்களை இந்தக் கட்டங்களில் அடைக்க வேண்டும். இடமிருந்து வலமாக மேலிருந்து கீழாக அல்லது குறுக்காக எப்படிக் கூட்டி னாலும் முன்னூற்று அறுபத்தொன்பது வரும். முன்னூற்று அறுபத்தொன்பதில் உள்ள எண்கள் மூன்று ஆறு ஒன்பதைக் கூட்டினாலும் கடைசியாக ஒன்பதே வரும். இவ்வாறாக பீடத்தில் ஒன்பது கட்டங்களும் அமைக்கப் படும் எண்களைக் கூட்டினால் ஒன்பதும் ஆக இரண்டுமே செவ்வாய்க்குரிய எண் ஒன்பதாக வருவது இந்தச் சக்கரத்தின் விசேஷம் என்று சொல்ல வேண்டும்.

சித்தர்கள் இந்த எந்திரத்தை இரும்புத் தகட்டில் அமைக்க வேண்டும் என்று கூறியிருப்பதன் ரகசியம் விளங்கவில்லை. செவ்வாய்க்குரிய உலோகம் செம்பு. அதை விட்டு சனிபகவானுக்குரிய இரும்பைத் தேர்ந்தெடுத் தது அங்காரகன் அனுக்கிரகத்தால் சனிக்கிரகத்தால் உண்டாகும் தோஷங்களையும் வெல்ல முடியும் என்ற எண்ணத்தால் எழுந்ததாக இருப்பினும் இருக்கலாம்.

இந்தச் சக்கரத்தை பயன்படுத்த விரும்புபவர் கோச்சார ரீதியாக செவ்வாய் நல்ல ஸ்தானத்தில்

இருக்கும்போது சக்கரத்தை வரைந்து தயாரிக்க வேண்டும். ஜென்ம ராசியிலிருந்து மூன்று ஆறு பதினொன்றாமிடங்களில் இருக்கும் பொழுதே செவ்வாய் கோச்சார ரீதியாக நன்மை செய்வார். இந்த மூன்று வீடுகளில் பகை நீச்ச ஸ்தானமாக இல்லாமலும் நல்ல

செவ்வாய்:

37	78	29	70	21	62	13	54.	5.
6	38	79	30	71	22	63	14.	46
47	7	39	80	31	72.	23	55.	15
16	48	8	40	81	32	64.	24	56
57	17	49	9	41	73.	33	65	25
26	58	18.	50	1	42	74	34	66.
67	27	59	10	51	2	43	75	35
36	68.	19	60	11	52	3	44	76
77	28	69	20	61	12	53	4	45

நவாம்சத்தில் சஞ்சரிக்கும் படியான சமயமாகவும் பார்த்து சக்கரத்தைத் தயார் செய்ய வேண்டும். செவ்வாய்க்கிழமை செவ்வாய் ஓரையில் பூஜையை ஆரம்பிக்க வேண்டும். செவ்வாய்க்கிழமை காலை சூரியோதயம் முதல் ஒரு மணி

நேரம் வரை செவ்வாய் ஓரைக் காலம். அதன் பிறகு ஆறுமணி நேரத்திற்குப் பிறகு மறுபடியும் செவ்வாய் ஓரை வரும்.

ஒருவர் ஜாதகத்தில் செவ்வாய் ஆறு எட்டு பனி ரெண்டில் மறையாமலும் அல்லது மூன்று, ஆறு, எட்டு, பனிரெண்டாமாதிபத்தியம் பெறாமலும் இருப்பது நல்லது. இருக்கும் ஸ்தானம் பகை நீச்ச வீடாக இல்லாமலும் மற்ற வீடு ஸ்தானங்களில் உள்ளபோது பகை நீச்ச நவாம்சங்கள் பெறாமலும் சூரியனால் அஸ்தமனமாகாமலும் இருந்தால் செவ்வாய் ஜாதகருக்கு நன்மை செய்யக் கூடியவராக இருக்கிறார் என்று எடுத்துக்கொள்ளலாம்.

செவ்வாயால் உண்டாகும் சுப பலன்கள்

செவ்வாய் சகோதரகாரனாகையால் ஒருவருக்கு நல்ல சகோதரர்கள் அமைவதும், அவர்களால் நன்மைகள் உண்டாவதும் செவ்வாய் நல்ல விதமாக அமைந்திருந் தாலே உண்டாகக் கூடிய பலன்களாகும், செவ்வாய் பூமி காரகனுமாகையால் பூமி விவசாயம் முதலானவற்றில் அடையக் கூடிய லாபங்கள், சிவப்பு நிற வஸ்திரங்கள் தானியங்கள், உலோகங்களை உருக்கி வார்க்கும் தொழில், ஆயுதங்கள் தயாரித்தல், வெடி மருந்துத் தொழில்கள், அச்சு எழுத்துக்கள் உண்டாக்குதல் முதலான தொழில்களில் வெற்றி வாய்ப்புகளை அளிப்பார்.

தங்கம் தாமிரம் போன்ற உலோகங்கள் சம்பந்தப் பட்ட தொழில்கள் அல்லது வியாபாரம் ரசவாதம் செய்தல், ரசாயனப் பொருள்கள், விஷ மருந்துகள் செங்கல் சூளை போன்ற தொழில்கள், கழற்மண், செம்மண், மலைப் பகுதிகள் முதலான இடங்களிலிருந்து அடையும் லாபங்கள் சுரங்கப் பொருள்களால் உண்டாகும் லாபங்கள்,

இறைச்சி வியாபாரம், அறுவை சிகிச்சை செய்தல், சிறுவர்கள் அல்லது இளம் வயதினரான வேலைக்காரர் களை வைத்து தொழில் நடத்துவதால் கிடைக்கும் லாபங்கள், கட்டிடங்கள், பாலங்கள் கட்டுவதால் அடையும் லாபங்கள் இவையெல்லாம் ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் நன்றாக இருந்தால் மட்டுமே கிடைக்கக் கூடியனவாம்.

மேற்கூறிய துறைகளில் உள்ளவர்கள் தங்கள் வியாபார ஸ்தலங்களில் இந்த செவ்வாய் எந்திரத்தை மாட்டிவைப்பதாலும் நல்ல பலன்கள் உண்டாகும்.

செவ்வாயால் ஏற்படும் அசுப பலன்கள்

குடும்பச் சச்சரவுகள், சகோதர கலகம், சமமானவர் களோடு உண்டாகும் வழக்கு வியாஜ்யங்கள் பொது ஜன விரோதம் நாய் முதலான துஷ்ட மிருகங்களால் துன்பங்கள் ஏற்படுதல், அடிதடி, குத்து, வெட்டுக் காயம், நெருப்பினால் அபாயம், உடம்பில் சொறி, சிரங்கு ரணங்கள், புண்கள் போன்றவற்றால் துன்பம், வாத சம்பந்தமான ரோகங்கள், குடல் ரோகங்கள், அம்மை அல்லது கொப்புளங்களால் தோல் உரிதல், கெட்டவர் நேசத்தால் அவமானம், வீண் செலவுகள், கெட்ட பெண்கள் சகவாசத்தால் பொருள் நஷ்டம் அவமானம், அந்நியரால் ஏமாற்றப்படுதல், கள்வரால் தொல்லை, கடன் தொல்லைகள் முதலானவை செவ்வாயால் ஏற்படும் கெட்ட பலன்களாகும்.

இன்னும் சிலர் தரித்திரத்தால் பீடிக்கப்படுவதும், பரதேசியாய் அலைய நேர்வதும், ஜன சஞ்சாரமற்ற இடங்களில் மறைந்து வசிக்க நேர்வதும் கூட செவ்வாயால் ஏற்படும் தீய பலன்களாகக் கூறுவர்.

பொதுவாக கடன் தீர (நீங்க) வேண்டுமானால் செவ்வாயை துதிக்க வேண்டும் என்று சொல்வது வழக்கம்.

அங்காரகன் தன்னை யந்திர ரூபமாக திருவாவினன் குடி (பழநி)யில் உள்ள முருகன் காலடியில் தன்னை ஸ்தாபித்துக் கொண்டிருப்பதாகக் கூறுவர். தவிர அங்காரகன் தவம் செய்து உயர்வு பெற்ற ஸ்தலம் வைத்தீஸ்வரன் கோவில் இந்த இரண்டு ஸ்தலங்களிலும் முருகனே புகழ்பெற்று விளங்குகிறார். முருகனே செவ்வாயின் அம்சம் என்று சொல்வதும் உண்டு. எனவே செவ்வாயால் உண்டாகும் கஷ்டங்கள் விலக இந்த ஸ்தலங்களில் வழிபாடு செய்வது உத்தமம்.

அங்காரக ஸ்தோத்திரம்

அங்காரக: சக்தி தரோ லோஹிதாங்கோ தராஸுத:
குமரோ மங்களோ பௌமோ மஹா காயோ தனப்த:
ருண ஹர்தா த்ருஷ்டிகர்தா ரோகக்ருத் ரோக நாசன:
வித்யுத் ப்ரபோ வரணகர: காமதோ தன ஹ்ருத் குஜ:
ஸாம கான ப்ரியோ ரக்த வஸ்த்ரோ ரக்தாய தேக்ஷண:
லோஹிதோ ரகத வர்ணச்ச ஸர்வகர்மா வபோதக:
ரக்த மால்யதரோ ஹேமகுண்டலீ க்ரஹ நாயக:
நாமான் யேதானி பௌமஸ்ய ய: படேத் ஸததம் நர:
ருணம் தஸ்யச தௌர் பாக்யம் தாரித்ர்யம்ச விநச்யதி:
தனம் ப்ராப்னோதி விபுலம் ஸ்திரீயம் சைவ மனோரமாம்:
வம் சோதத் யோசுதரம் புதரம் லபதே நாத்ர ஸம்சய:
யோ 5ர்சயே ஹ்னி பௌமஸ்ய மங்களம் பஹு புஷ்பகை:
ஸர்வா நச்யதி பீடா சதஸ்ய க்ரஹக்ருத் த்ருவம்

அங்காரக ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

செவ்வாய் காயத்ரீ

வீரத்வஜாய வித்மஹே விக்ந ஹஸ்தாய தீமஹி
தன்னோ பௌம: பிரசோதயாத்

கடன் தொல்லை நீங்க செவ்வாய்
தியான ஸ்தோத்ரம்

ரக்த மால்யாம் பரதரம் ஹேமரூபம் சதுர்புஜம்
சக்திசூலம் கதாபத்மம் தாரயந்தம் கரம்புஜை: ||

அங்காரகனால் ஏற்படும் தீயபலன்களுக்குப் பரிகாரமாக சுப்ரமண்ய ஜெபம் ஏழாயிரம் செய்ய வேண்டும். அதற்குரிய மந்திரம்.

ஓம் க்ராம் க்ரீம் க்ரௌம், ச: பௌமாய நம

மேற்படி ஜபம் செய்வதுடன் துவரை சிவப்பு அஸ்திரம் சொர்ணதானம் செய்வது உத்தமம்.

புதன் சக்கரம்

ஐந்து கட்டங்கள் வரும்படியாக குறுக்காக ஆறு கோடுகள் வரைந்து சமசதுரமாக அமைப்பது புதன் சக்கரம்.

மேல் நாட்டு எண் சோதிட முறைப்படி புதனுக்குரிய எண் ஐந்து. ஐந்து கட்டங்களை பீடமாகக் கொண்டு சக்கரம் அமைவது மேல்நாட்டு எண் சோதிட முறை எவ்வளவு தூரம் சித்தர்கள் கையாண்ட முறையைப் பின் பற்றியிருக்கிறது என்பதைத் தெளிவாகவே விளக்குவதாக

இந்த எந்திரத்தில் ஒன்று முதல் இருபத்தைந்து வரை உள்ள எண்களை குறுக்கு நெடுக்காக எப்படிக் கூட்டினாலும் அறுபத்தைந்து வருகிற முறையில் அமைக்க வேண்டும்.

புதன் 65

11	24.	7.	20	3
4	12	25.	8	16
17	5	13	21	9
10	18	1	14	22.
23.	6	19	2	15

ஆறும் ஐந்தும் பதினொன்று. ஒன்றும் ஒன்றும் இரண்டு. ஆக இந்த எண் எந்திரத்தில் எண்களின் கூட்டுத் தொகை இரண்டாக அமைகிறது. இரண்டும் சந்திரனின் அதமஎண். அதாவது தேய்பிறைச் சந்திரனைக் குறிக்கும் எண் என்றும் சொல்லலாம். புதனுடைய சக்கரத்தில் சந்திரனுடைய எண் வருவது ஒரு வகையில் பொருத்தமானது என்றே கூறலாம். புதன் சந்திரனுடைய மகனல்லவா? சந்திரனுக்கும் புதன் பகை. அதனால் இந்தப் புதனுடைய எந்திரம் சந்திரனுடைய பலத்தை கிரகித்து நன்மை செய்யத்தக்க விதத்தில் சித்தர்கள் அமைத்திருக்கிறார்கள் என்று கருதலாம்.

புதனுக்குரிய உலோகம் பித்தளை. அதனால் பித்தளைத் தகட்டில் இந்த எந்திரத்தை வரையவேண்டும். எந்திரத்தை மரப்பலகையில் பதித்து அதன்மேல் படியும் ஒளியில் பார்வை நிலைக்கும்படியாக அமர்ந்து பிரார்த்தனை செய்வது நல்ல பலன் தரும்.

கோச்சாரத்தில் புதன் அஸ்தமனமாகாமலும் பகை நீச்சம் அல்லது பகை நீச்ச நவாம்சம் அடையாமலும் நல்ல நிலைமையில் இருக்கும் காலத்தில் எந்திரத்தை அமைக்க வேண்டும். ராசியிலிருந்து இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, பத்து, பதினொன்றாமிடங்களில் இருக்கும் காலத்தில் கோச்சார ரீதியாக புதன் நற்பலன்களைத் தருபவராவார். புதன் கிழமையன்று புதனுடைய ஓரையில் அஃதாவது காலை சூரியோதயம் முதல் ஒரு மணி நேரத்திற்குள்ளாக எந்திர பூஜை செய்வது உத்தமம். காலை ஆறு மணி முதல் ஏழு மணி வரை புதன் ஓரை என்றால் அதன்பிறகு ஆறு மணி நேரத்திற்குப் பிறகு மறுபடியும் புதனுடைய ஓரை வரும்.

புதன் திசை சுப பலன்களைத் தரக்கூடியதாயின் இந்த எந்திரபூஜை சுப பலன்களை அதிகரிக்கச் செய்யும். தீயபலன்களைத் தரக்கூடியதாயின் அத்தீய பலன்களால் உண்டாகும் கஷ்டத்தை குறைக்கும்.

புதன் தரும் யோக பலன்கள்

புதன் புத்திகாரகனல்லவா? நல்லபுத்தி தெளிந்த மனம், அபாரமான சிந்தனை, விஷயங்களை சட்டென்று கிரகித்துக் கொள்ளும் சக்தி, சட்டென்று முடிவுக்கு வந்து சாமர்த்தியமாக செயலாற்றும் திறமை, முதலியவை புதன் நன்றாக அமையப் பெற்றவர்களிடமே காணப்படும். நல்ல நட்பு, பண்டிதர்கள், வித்வான்களோடு கலந்து பழகும்வாய்ப்பு, தர்க்கம், கணிதம், விஞ்ஞானம், சித்திரம் வரைதல், சிற்ப சாஸ்திரம், நடிப்பு, நாட்டியத்துறைகளில்

திறமை இவையெல்லாம் புதன் தரும் சௌபாக்கியங்களே யாகும்.

பேச்சுத் திறமை, கதை கட்டுரை எழுதுவதில் திறமை, கலைகள் பற்றிய ஆராய்ச்சி, கலைகளை (விமர்சிக்கும்) திறனாயும் அபூர்வமான சக்தி, நூதன உத்திகளைக் கையாளுதல் புதியவற்றைக் கண்டு பிடித்தல் அவற்றால் புகழ் சன்மானங்கள் பெறுதல்,

பகைவர்களுக்கிடையே உறவு உண்டாக்கி இரு சாராருக்கும் நன்மை செய்து இரு சாராராலும் புகழப் படுதல், புண்ணிய புராணங்கள் கேட்டல், புராண இதிகாசங்களை எடுத்துக் கூறல், புண்ணிய ஸ்தல யாத்திரை, பரோபகார சிந்தை, தெய்வ பிராமண விஸ்வாசம், பெரியோர்கள் மகான்களின் ஆசி அனுக்கிரகம் பெறுதல், பட்டு பீதாம்பரங்கள் பொன் ஆபரணங்கள், ரத்ன ஆபரணங்கள் அணியும் பாக்கியம், மனைவி மக்களால் சுகம், பந்துக்களின் நேசம் முதலிய நல்ல பலன் களையும் புதன் அளிப்பார்.

புதனால் ஏற்படும் அசுப பலன் ள்

கல்விக்குத் தடங்கல், மந்த, புத்தி, கெட்ட சகவாசம், பொய்சாட்சி சொல்லுதல், மொட்டைக் கடிதம் எழுதுதல், திருட்டுக் கையெழுத்துப் போடுதல் போன்றவற்றால் உலக நிந்தைக்கு ஆளாதல், நல்லவர்களால் வெறுக்கப் படுதல், நாணயம் தவறுவதால் அவமானத்திற்குள்ளாதல், உறவினர்களால் தொல்லைகள், விதண்டாவாதம் எல்லா வற்றிலும் குயுக்தியாக விபரீதமான அர்த்தம் கண்டுபிடித் தல், குயுக்தியாகப் பேசுதல், நாஸ்திக வாதம், கெட்ட நடத்தை அரைகுறை ஞானத்தை பெரிதாக நினைத்துக் கொண்டு பெரியோர்களை எதிர்த்துப் பேசுதல், அந்நிய தேசவாசம். வயிற்று நோய், கபரோகங்கள், தவறான நடத்தையால் ஆண்மை குன்றுதல், அலியைப் போல்

நடித்தல் இவை புதனால் உண்டாகும் கெட்ட பலன் களாம்.

புதன் ஸ்தோத்திரம்

புதோ புத்திமதாம் ச்ரேஷ்டோ புத்தி தாதா தனப்ரத:
ப்ரியங்கு கலிகாச்யாம. கஞ்ச நேத்ரோ மனோஹர :
க்ரஹோபமோ ரௌஹிணேயோ நக்ஷத்ரேசோ தயாகர :
விருத்த கார்ய ஹந்தா ச ஸௌம்யோ புத்தி விவர்த்தன.
சந்த்ராத் மஜோ விஷ்ணு ரூபீ ஞானிக்ஞோ ஞானிநாயக
க்ரஹபீடா ஹரோ தாவபுத்ர தான்ய பசு ப்ரத :
யோகப்ரிய : ஸௌய மூர்த்திர் குணதோ குணவத்ஸல :
பஞ்ச விம்சதி நாமானி புதஸ்யைதானிய : படேத்:
ஸ்ம்ருத்வா புதன் ஸதா தஸ்ய பீடா ஸர்வா விநக்யதி :
தத்தினே வா படேத் யஸ்து லபதே ஸ்மனோகதம்
புத ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

புத காயத்ரீ

கஜ த்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய தீமஹி
தன்னோ புத : பிரசோதயாத்

புத்தி, சக்தி மேன்மைக்காகவும் பந்துக்களால் நன்மை அல்லது பிரிந்து போன பந்துக்கள் வந்துசேர, வியாபார லாபம் பெற புதனைக் குறித்துச் செய்யும் தியான ஸ்லோகம்.

சிம்ஹாருடம் சதுர்புஜம் கட்க சர்ம கதாதரம்
சோமபுத்ரம் மஹா சௌம்யம் தியாயேத் பரார்த்த
சித்திதம் ||

புதனால் ஏற்படும் தோஷ பரிகாரத்திற்கு மகாவிஷ்ணு ஜபம் பதினேழாயிரம் செய்ய வேண்டும்-புதனுக்குரிய ஜெப மந்திரம்.

ஓம் பிராம் பிரீம் ப்ரௌம் ச : புதாய நம :

புதன் மதுரையிலுள்ள சொக்கநாதர் ஆலயத்தில் தன்னை எந்திரரூபமாக ஸ்தாபித்துக் கொண்டிருப்பதாகச் சொல்வர். புதனால் நன்மை பெற மதுரை சென்று மீனாட்சி சுந்தரேஸ்வரரை வழிபடுவதும் அங்கு அமர்ந்து புதனுக்குரிய மந்திரத்தை ஜெபிப்பதும் அதிக நன்மை தரும்.

குரு சக்கரம்

நான்கு கோடுகள் குறுக்காகவும் நெடுக்காகவும் மூன்று கட்டங்கள் வருகிற மாதிரி சதுரமாக அமைப்பது குரு சக்கரம் மேற்கத்திய எண் சோதிட முறைப்படி குருவுக்குரிய எண் மூன்று இங்கே பீடமாக அமைக்கப்படுகிறது.

குரு

4.	9	2.
3.	5.	7
8	1	6.

ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்கள் இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ அல்லது குறுக்காகவோ எப்படிக் கூட்டினாலும் பதினைந்து வருகிற மாதிரி எண்களை அமைக்க வேண்டும்.

பதினைந்தில் உள்ள எண்களைக் கூட்டினால் ஒன்றும் ஐந்தும் ஆறு, குரு பகவானுக்குரிய பீடத்தில் சுக்கிரனுக்குரிய எண் வருகிற மாதிரி சக்கரம் அமைகிறது. இந்தச்

சக்கரத்தை வெள்ளித் தகட்டில் வரைய வேண்டும் என்று சித்தர்களின் சுவடிகளில் காணப்படுகிறது.

உங்கள் ஜாதகத்தில் ஒரு நல்ல நிலைமையில் இருக்கும் காலத்தில் அதாவது ஜென்ம ராசியிலிருந்து ஒன்று, இரண்டு, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று ஆகிய ஸ்தானங்களில் குரு சஞ்சரிக்கிற காலம் கோச்சார ரீதியாக நல்லகாலமாகும். இந்த வீடுகளில் குரு பகை நீச்சம் பெறாமலும், பகை நீச்ச நவாம்சங்கள் பெறாமலும் சூரியனால் அஸ்தமன மாகாமலும் இருக்கவேண்டும். அவ்வாறு உள்ள காலத்தில் வியாழக்கிழமையில் வியாழ ஒரையில் சக்கரத்தை ஸ்தாபித்து தியானம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். வியாழக்கிழமை காலை ஆறு மணி முதல் ஏழு மணிவரை குரு ஓரை. ஆனால் அந்த நேரம் எமகண்டத்தில் வருகிறது. ஏழுமணியுடன் ஆறுமணி நேரத்தைக் கூட்டினால் மத்தியானம் ஒரு மணிக்கு மீண்டும் குரு ஓரை வரும். ஒன்றரை முதல் மூன்று மணி வரை ராகுகாலம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மறுபடியும் இரவு எட்டு மணிக்கு குரு ஓரை வரும். இந்த விஷயங்களை நன்கு கவனித்து பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

குரு திசை சுப பலன்களைத் தருவதாயின் இந்த யந்திர பூஜை சுப பலன்களை அதிகரிக்கச் செய்யும், குரு திசை தீய பலன்களைத் தரக் கூடியதாயின் அத்தீய பலன்களால் உண்டாகும் கஷ்டத்தைக் குறைக்கும்.

குரு தரும் நற் பலன்கள்

ஒரு ஜாதகத்தில் குரு நன்றாக அமைந்திருந்தால் குரு புத்திரகாரகனாகையால் நல்ல பிள்ளைகளைக் கொடுப்பார். அவர்களால் வாழ்க்கையில் சந்தோஷமும் உண்டா

கும். கம்பீரமான தோற்றத்தையும். கணீர் என்ற பேச்சையும், மற்றவர்கள் மதிக்கத்தக்க அந்தஸ்தையும் கொடுப்பார், மந்திரி பதவிக்குச் சமானமான பதவியை அளிப்பார். வேதபாராயணம், உயர்ந்த விஷயங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுதல். புகழ், சன்மானம், நல்ல வீடு, வாகனம், உற்றார் உறவினர் அமைதல் உயர்ந்த மக்களின் நேசம், குடும்ப க்ஷேமம், தேக ஆரோக்கியம், மனதில் சந்தோஷம், பிறர்க்கு விஷயங்களை எடுத்துச் சொல்வதில் திறமை, நல்ல ஆசிரியராக விளங்குதல், அந்நிய நாடுகளில் புகழ் பெறுதல், தெய்வ பக்தி ஆலயம் கட்டுதல் முதலான புண்ணிய காரியங்களில் ஈடுபாடு, மந்திர சித்தி, ஆத்ம அனுபவம் பெறுதல், தோட்டங்கள், பூங்காவனங்கள், தெய்வானுகூலமான இடங்கள் முதலிய வற்றில் வசித்தல், பால் பாக்கிய விருத்தி, தங்கம், வெள்ளி, நவரத்தினங்களால் லாபம் முதலான சகல நன்மைகளையும் குரு அளிப்பார்.

குருவினால் ஏற்படக் கூடிய தீய பலன்கள்

ஒரு ஜாதகத்தில் குரு கெட்டுப் போயிருந்தால் அந்த ஜாதகர் சகல ஆச்சாரங்களையும் ஒழுக்க விதிகளையும் கைவிட்டுப் பெரியோர்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்கிறார்களோ அதற்கு எதிரான செயல்களிலேயே ஈடுபடுவார். தெய்வத்தை நிந்தித்தல், நல்லவர்களை தூஷித்தல், தாய், தந்தை, குரு, பந்துக்கள், சகோதரர்கள் முதலானவர்களை நிராதரவு செய்து தன் மனம் போனபடி நடத்தல், கோயில், குளம், தர்மசாலை முதலானவற்றில் தவறாக நடந்து கொள்ளுதல் அவைகளை அழித்து ஒழிக்க விரும்புதல், நயவஞ்சகம், திருட்டு, மோசடி, பொய்சாட்சி, அரசாங்கத்திற்கு எதிராக சதி வேலையில் ஈடுபடல், கெட்ட காரியங்களைச் செய்வதிலேயே பரம சந்தோஷத்தையும், திருப்தியையும் அடைதல், மன நோய்களுக்கு ஆளாதல், புத்தி விகாரப்படுதல்,

தாம்பத்திய சுகக்குறைவு, பிள்ளைகளிடம் பாசமின்மை, தன் குழந்தைகளுக்கே தான் கேடு செய்தல், குடல் நோய், வயிற்றில் கொழுப்பு சேருதல், வாதரோகங்கள், புற்று நோய்கள் போன்றவற்றுக்கு ஆளாதல்.

தான் கற்ற நல்ல விஷயங்களையும் திருத்தி, அவற்றுக்கு தவறாக அர்த்தம் கற்பித்துப் பேசுதல், பூர்வீக சொத்துக்களை விரயம் செய்தல், பொன்னை மண்ணாக மதிப்பது போல் விலை மதிப்புள்ள பொருள்களை அற்ப விலைக்கு விற்று விரயம் செய்தல், அவமானம், அடிமைத் தனம், பந்து ஜன விரோதம், துர் நடத்தை முதலானவை உண்டாகும். இதை அனுபவபூர்வமாகவும், கண்கூடாக வும் காணலாம். எனவே குருப்ரீதிக்காக வியாழக்கிழமை தோறும் யந்திர பூஜை செய்வதும் விரதம் இருப்பதும் நன்மையை உண்டாக்கும்.

குரு ஸ்தோத்ரம்

பிருகஸ்பதி (குரு)

குருர் ப்ரு ஹஸ்பதிர் ஜீவ: ஸுராசார்யோ விதாம்வர:
வாகீசோ திஷணோ தீர் கச் மச்ரு: பீதாம்பரோயுவா ||
ஸுதாத்ருஷ்டிர் க்ரஹா தீசோ க்ரக பீடாபஹாரக:
த யாகர: ஸௌம் யமூர்த்தி: ஸுராசார் ய: குட்மலத்யுதி:
லோகபூஜ்யோ லோக குருர் நீதிக்ஞோ நீதிகாரக:
தாராபதிஸ் சாங்கிரஸோ வேத வேத்ய: பிதாமஹ:
பக்த்யா ப்ருஹஸ்பதிம் ஸ்ம்ருத்வா நாமான்யே தானிய:
படேத்

அ ரோகீபலவான் ஸ்ரீ மான் புத்ரவான் ஸ பவேந் நர:
ஜீவேந் வர்ஷ சதம் மர்த்யோ பாபம் நச்யதி நச்யதி:
ய: பூஜயேத் குருதினே பீத கந்தாக்ஷதாம் பரை:

புஷ்பதீபோபஹாரைச்ச பூஜயித்வா ப்ரு ஹஸ்பதிம்!
ப்ராஹ்மணான் போஜ யித்வா ச பீடா சாந்திர் பவேத்
குரோ!

குரு ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

குரு காயத்ரி

விருஷ பத்வ ஜாய வித்மஹே க்ருணி ஹஸ்தாயதீமஹீ
தன்னோ குரு ப்ரசோதயாத்

சந்தான லாபத்திற்கும் குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கும் பொதுவாக குடும்ப க்ஷேமத்திற்கு குருவைக் குறித்து தியானம் செய்து வருவது நல்லது. தியான ஸ்லோகம்.

வராக்ஷ மாலா தண்டம் கமண்டல தரம் விபும்
புஷ்யராகாங்கிறம் பீதம் வரதம் பாவயேத் குரும்!!

குருவால் ஏற்படும் தோஷ பரிகாரத்திற்கு குரு ஜெபம் பதினாறாயிரம் செய்ய வேண்டும், மந்திரம்.

ஓம் ஹ்ராம் ஹ்ரீம் ஹ்ரௌம்ச பிருஹஸ்பதயே நம

சுக்ரன்

குறுக்காக ஏழு கோடுகள் நெடுக்காக ஏழு கோடுகள் ஆறு கட்டங்கள் வரும்படியாக வரைந்து ஒன்றிலிருந்து முப்பத்தாறு வரை எண்களை எப்படிக் கூட்டினாலும் நூற்றுப் பதினொன்று வரும்படியாக அடைப்பது சுக்கிரனுடைய எண் சக்கரம்.

மேற்கத்திய ஜோதிஷ முறைப்படி சுக்கிரனுக்குரிய எண் ஆறு. அதைப் பீடமாக அமைத்து குருவுக்குரிய எண்ணாண மூன்று கூட்டு மொத்தமாக வரும்படி இந்தச் சக்கரத்தை சித்தர்கள் அமைத்திருப்பது ஏதோ ஒரு காரணம் பற்றியாகவே இருக்க வேண்டும்.

சுக்கிரன்: 111

6.	32	3	34	35	1.
7	11	27	28	8.	30
19	14.	16.	15	23	24
18	20	22	21	17	13
25.	29	10	9	26.	.12
36.	5.	33	4.	2.	31

சுக்கிரன் கோசார ரீதியாக நல்ல நிலைமையில் நிற்கும்போது இந்தச் சக்கரத்தைத் தயார் செய்ய வேண்டும். ஜென்ம ராசியிலிருந்து மூன்று, ஆறு, பத்தா மிடங்கள் தவிர மற்ற எல்லா இடங்களிலும் சுக்கிரன் நன்மையே செய்வார். செவ்வாய் சூரியனுக்கு உரிய உலோகமாகிய செப்புத் தகட்டில் இந்தச் சக்கரத்தை வரைய வேண்டும் என்று கூறியிருப்பது இன்னும் ஒரு விசேஷம், பல இடங்களில் சித்தர்களின் கருத்துக்கள் நமக்குப் புரியாத புதிராகவே உள்ளன. ஆயினும் அவற்றை அப்படியே பின்பற்றுவதுதான் நல்லது.

வெள்ளிக்கிழமை வெள்ளி ஓரையில் அதாவது காலை 6 மணி முதல் 7 மணிக்குள் சக்கரத்தை ஸ்தாபித்து பூஜையைத் தொடங்க வேண்டும்.

சுக்கிரன் களஸ்திரகாரகன். நல்ல மனைவி அமைவதும் மனைவியால் சுகம்கிடைப்பதும் ஜாதகத்தில் சுக்கிரன் நன்றாக அமைவதைப் பொறுத்தே உள்ளது. சுக்கிரன் ஜாதகத்தில் பகை நீச்ச ஸ்தானங்களில் இல்லாமலும் பகை நீச்ச நவாம்சங்களை அடையாமலும் இருப்பது நல்லது. மூன்று ஆறு எட்டு பனிரெண்டாமிடங்களில் மறையாமலும் சுபர் பார்வை அல்லது சேர்க்கை பெற்றும் அமைந்திருந்தால் நல்லது.

சுக்கிரனால் ஏற்படும் நன்மைகள்

மனைவி, மனைவியால் ஏற்படும் சுகம், காதல் இன்பத்தில் களிப்பும் உற்சாகமும் உண்டாகுதல், நல்ல ஆரோக்கியம், நறுமண மலர்கள், வாசனைத் திரவியங்களால் சுகத்தை அனுபவித்தல் இவையெல்லாம் சுக்கிரனால் கிடைக்கும் சுப பலன்களாகும். சுக்கிரன் அசுரகுரு, கவி, அதனால் நடன, நாட்டிய சாஸ்திரங்கள், கவிதை புனைதல், இரு பொருள் படவும் சிலேடையாகவும் பேசும் திறன், மந்திர சாஸ்திரத்திலும் வித்தைகளிலும் பாண்டித்தியம் இவையெல்லாம் சுக்கிரனால் கிடைக்கக்கூடிய சுப பலன்களே, சுக்கிரன் வாகனகாரனுமாகையால் வண்டி வாகனங்கள், யானை சேனை பரிவாரங்கள்! நல்லோர் நேசம், லக்ஷ்மீகரம், சுலபமாகப் பொருள் கிடைத்தல். லாட்டரி, பந்தயம் போன்றவற்றில் அதிர்ஷ்டம், புதையல் கிடைத்தல், விருதுகள், சன்மானங்கள், ஆடையாபரண லாபங்கள் இவையும் சுக்கிரனால் கிடைக்கக்கூடிய சுப பலன்களே, சுக்கிரன் நன்றாக அமைந்திருந்தால் அழகான கண்களும் ரூப லாவண்யமும் உண்டாகும்.

சுகமான கண்ணுக்கு ரம்யமான இடங்களில் வசித்தல் பயிர் பச்சைகளால் லாபம், தென்னை, வாழை, மா, பலா, ஏலம், லவங்கம், மிளகு போன்ற பயிர் பச்சைகளால் லாபம், ஓவியம் வரைதல், சங்கீதம், நடனம், நாடகம் போன்றவற்றில் ஈடுபாடு, ஆடல் பாடல்களில் வெற்றியும், புகழும் அடைதல், உல்லாசப் பிரயாணம், தீர்த்த யாத்திரை, கடல் பிரயாணம் போன்றவற்றில் ஈடுபாடு, அவற்றால் உண்டாகும் மகிழ்ச்சி, லாபங்கள். விசித்திரமான ஆண் பெண்களுடன் சகவாசம் முதலானவையும் சுக்கிரனால் ஏற்படக்கூடிய சுப பலன்களே ஆகும்.

சுருக்கமாகச் சொல்வதானால் செல்வம், செல்வாக்கு, சுகம், புகழ், பட்டம், பதவி இவையனைத்துமே சுக்கிரன் ஜாதகத்தில் நல்லவிதமாக அமைந்திருப்பதைப் பொறுத்தே அமைவனவாகும்.

சுக்கிரனால் ஏற்படக்கூடிய தீய பலன்கள்

ஒரு ஜாதகத்தில் சுக்கிரன் கெட்டுப் போயிருந்தால் திருமணம் தாமதமாகும். அடிக்கடி தடங்கல்களும் சிக்கல்களும் உண்டாகும். நல்ல அழகான மனைவி அமைய மாட்டாள். கெட்ட பெண்களுடன் தொடர்பு, சகவாச தோஷத்தால் தீய நடத்தை, அதனால் உண்டாகும் ரோகங்கள், அவமானம், பொருள் நஷ்டம், மனச் சஞ்சலம் முதலானவை உண்டாகும். உடல் நலம் கெடுதல், முகத்தில் கரிய தழும்புகள் போன்ற அடையாளங்கள் உண்டாதல், தரித்திரம் முதலானவையும் உண்டாகும்.

கெட்ட சகவாசம், சொத்து சுகங்கள் நஷ்டப்படுதல், மான நஷ்டம், அங்கவீனம், ஆடையாபரணங்களை இழத்தல், கடன் தொல்லைகள், வழக்கு வியாஜ்ஜியங்களால்

தொல்லைகள், மனதில் பயம், சஞ்சலம் எதையாவது நினைத்து ஏக்கப்பட்டுக் கொண்டே இருத்தல், எத் தொழிலையும் சரிவரச் செய்ய முடியாமை, கோப தாபங்கள் அதிகரிப்பதால் பல பேரின் விரோதத்திற்கு ஆளாதல், வீண் பழி, தண்டனை பாவ காரியங்களில் ஈடுபடுதல், காம விகாரத்தால் மதி மயக்கம், மது மாமிசங்களில் இச்சை, சதா குடி போதையிலிருத்தல், மனைவி மக்கள் என்ற பாசம் இல்லாதிருத்தல், அவர்களால் துக்கங்களை அனுபவித்தல் போன்ற கஷ்டங்களும் ஏற்படலாம்.

மேலும் ஜாதகத்தில் சுக்கிரன் நன்றாக அமையாவிட்டால் நல்ல உத்தியோகம் கிடைக்காது வியாபாரம் விருத்தியாகாது, விவசாயம் செய்யப் போனாலும் பயிர் பச்சைகள் நன்றாக வராது. தொட்டது துலங்காது என்கிறபடி சகல காரியங்களிலும் தடங்கல்களும், சிக்கல்களும் நஷ்டங்களுமே உண்டாகும்.

சுக்கிரன் நல்ல நிலைமையில் அமையப் பெற்றவர்கள் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய சுப பலன்களை விருத்தி செய்து கொள்ளவும், சுக்கிரன் கெட்டுப் போயிருந்தால் அதனால் உண்டாகக் கூடிய தீய பலன்களிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இந்த யந்திர பூஜை மிகவும் உதவும். சுக்கிரனுடைய நட்சத்திரங்களான பரணி, பூரம், பூராடம், நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இடைவிடாமல் இந்த யந்திரத்தை வைத்து பூஜித்து வருவது மிகவும் நல்லது.

சுக்கிர ஸ்தோத்திரம்

சுக்ர: காவ்ய: சுக்ரேதா: சுக்லாம் பரதர ஸுதீ
ஹிமாப: குந்ததவல: சுப்ராம்சு: சுக்ல பூரண: 1
நீதிக்ஞோ, நீதி க்ருந் நீதி மார்க்க காமீ க்ரஹாதிப
உசனா வேத வேதாங்க பாரக: கவி ராத்மவித் 2

பார்கவ: கருணா ஸிந்துர் ஞானகம்ய ஸுதப்ரத:
சுக்ரஸ்யை தானி நாமானி சுக்ரம் ஸ்ம்ருத்வாதுய:
படேத் 3

ஆயுர் தனம் ஸுகம் புத்ரம் லக்ஷ்மீம் வஸதி முத்தமாம்
வித்யாம் சைவ ஸ்வயம் தஸ்மை சுக்ரஸ் துஸ்டோ
ததா திவிரி 4

சுக்ர ஸ்தோத்ரம் சம்பூர்ணம்

சுக்ர காயத்ரி

அச்வத்வஜாய வித் மஹே
தனுர் ஹஸ்தாய தீ மஹீ
தன்னோ சுக்ர: பிர சோதயாத,

விவாகம் கை கூட, நல்ல மனைவி அமைய, ஆயுள் ஆரோக்கிய விருத்திக்கு சுக்கிரனைக் குறித்த தியான ஸ்லோகம்.

ஜடிலம் சாக்ஷ சூத்ரம்ச பாதண்ட கமண்டலம்
சுவேத வஸ்த்ராதம் சுக்ரம் தியாயேத் நவபூஜிதம்

சுக்கிரன் அசுப பலன் தரும் காலத்தில் மஹா லக்ஷ்மியைக் குறித்து ஜபம் இருபதாயிரம் செய்ய வேண்டும். மொச்சை தானம் செய்ய வேண்டும். சுக்கிரன் தன்னை யந்திர ரூபமாக ஸ்தாபித்துக் கொண்டுள்ள ஸ்தலமான ஸ்ரீரங்கத்தில் தானம் ஜபம் செய்வது உத்தமம்,

சுக்கிரனுக்குரிய ஜப மந்திரம்

ஓம் த்ராம் த்ரீம் த்ரௌம்ச சுக்ராய நம:—இருபதாயிரம் தடவை,

சுக்கிரனுக்குரிய உலோகம் வெள்ளி ரத்னம் வைரம் தேவதை மஹாலக்ஷ்மி, தான்யம் மொச்சை.

சனீஸ்வர சக்கரம்

மேற்கத்திய எண் ஜோதிட முறைப்படி சனிக்குரிய எண் எட்டு சித்தர்கள் எவ்வளவு அற்புதமாக இந்தச் சக்கரத்தை வகுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்

சனி:

8.	58	59	5	4	62	63	1
9	15	51.	52.	53	54	10	16
48	18	22	44	45	19	23	41.
25	39	35.	29	28.	38	34	32
33	31	27	37	36	30	26	40
24	42	46	20	21	43	47	17
49	55	14	13	12	11	50	56
64	2	6	60	61	3	7	57

பொழுது மேற்கத்திய எண் ஜோதிட முறை சித்தர்களின் முறையை ஆதாரமாகக் கொண்டே அமைந்திருக்கிறது. என்பது விளங்கும், குறுக்கும் நெடுக்குமாக ஒன்பது

கோடுகள் எட்டுக்கட்டங்கள் வரும்படியாக அமைவது இந்தச் சக்கரம், ஒன்று முதல் அறுபத்து நான்கு வரை உள்ள எண்களை எப்படிக் கூட்டினாலும் இருநூற்று இருபது வரும்படியாக இந்தக் கட்டங்களில் அமைக்க வேண்டும்.

கட்டங்கள் எட்டு எண்களைக் கூட்டிவரும் மொத்தம் எட்டு (இரண்டும் ஆறும் எட்டு) பீடமும் சனிபகவானுக் குரிய எட்டுக் கட்டங்களாக அமைந்து எண்களின் கூட்டு மொத்தமும் எட்டாக அமைவதால் இது மிகவும் பலம் வாய்ந்ததாக அமைக்கிறது.

சனிபகவானுக்குரிய உலோகம் இரும்பு, காரீயம் இதை ஈயத்தகட்டில் இந்தச் சக்கரத்தை வரையும்படி சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

கோச்சார ரீதியாக சனி நல்ல ஸ்தானத்தில் இருக்கும் பொழுது இந்தச்சக்கரத்தை வரைந்து அணிந்துகொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது சனி மூன்று ஆறு பதினொன்றில் மட்டுமே நல்ல பலன்களை தரக் கூடியவர். ஒரு ராசியில் இரண்டரை வருஷம் சஞ்சரிப் பவர். அப்படிப் பார்க்கும் பொழுது கோச்சார ரீதியாக சனி நல்ல ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் காலம் வெகு அபூர்வ மாகவே ஏற்படும் அதனால் ஜாதகத்தில் சனி தங்களுக்கு பாதகமாக அமைந்திருக்கிறார் என்பதை உணர்பவர்கள் கோச்சார ரீதியாக சனி மூன்று ஆறு பதினொன்றாவ மிடங்களுக்கு வருகிற காலத்தில் முன் ஜாக்கிரதையாக இந்தச் சக்கரத்தைத் தயார் செய்து வைத்துக்கொள்வது நல்லது.

ஜாதக ரீதியாக ரிஷபம், துலாம், மகர லக்னங்களில் பிறந்தவர்களுக்கு சனி எவ்விடத்தில் இருந்தபோதிலும்

கெடுதல் செய்ய மாட்டார். மேஷம், கடகம், சிம்மம், தனுசு, மீனம் ஆகிய லக்னங்களில் பிறந்தவர்களுக்கு சனி எவ்விடத்தில் இருந்த போதிலும் கெடுதலே செய்வார். ஆயினும் பார்வை, சேர்க்கை, நவாம்சம் முதலானவற்றை அனுசரித்து எந்த அளவு நன்மை தீமைகளை செய்யக் கூடியவர் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

பொதுவாக சனி பகவானால் துன்பப்படுகிற நேரத்தி திலேயே சனி பகவானை பூஜிக்க வேண்டும். ஏதாவது சாந்தி பரிகாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வரும். அப்போது சனி நிச்சயமாக கோச்சார ரீதியாக நல்ல நிலைமையில் இருக்க மாட்டார். அதனால் சனிக்கு குரு அல்லது சுக்கிரன் பார்வை இருக்கின்ற காலத்தில் சனிக் கிழமை சனி ஓரையில் சக்கரத்தைத் தயாரித்து பூஜையை ஆரம்பிப்பதோ அல்லது தனிசமாகக் கட்டிக் கொள்வதோ நல்லது.

சனி பகவானால் ஏற்படும் நன்மைகள்

சனியைப் போல் கொடுப்பவருமில்லை. கெடுப்பவரு மில்லை என்பது பழமொழி. சனி பகவான் நல்ல நிலைமை யில் சஞ்சரிக்கிற காலத்தில் அதல பாதாளத்தில் இருக்கின்ற வரைத் தூக்கி உச்சாணிக் கொம்பில் உட்கார வைத்து விடுவார். அதே மாதிரி கெட்ட நிலைமையை அடையும் பொழுது மிக உயர்ந்த நிலையில் இருந்தவரை அதல பாதாளத்தில் தூக்கி எறிந்து விடுவார். சனி பகவானின் கொடுமைக்கு ஆளாகாதவர்கள் யாருமே இல்லை. தெய்வங்களும் அதற்கு விதி விலக்கல்ல. அதனா லேயே சனிபகவானைப் பற்றி எல்லோருமே அதிகமாகப் பயப்படுகிறார்கள். சனி பகவான் நல்ல நிலைமையில் அமைந்திருந்தால் பூமி, வீடு, வாகனம் ஏற்படுதல், பல

கிராமங்கள் நிலபுலங்களுக்கு சொந்தக்காரர் ஆதல் அல்லது அதிகாரியாதல், வனம் வனாந்தரங்கள், காடு மேடு மலைகள், சந்து பொந்துகளில் உள்ள வீடுகளும் தனக்குச் சொந்தமாதல், நிலத்திலிருந்து அதிகமாக வருமானம் பெறுதல், தலைமை ஸ்தானம், படைத் தலைவர் பதவி முத்திரையிடும் அதிகாரம், நீதிபதி போன்ற பல பதவிகளில் புகழ் பெறுதல். பொது ஜன நன்மைக்கான காரியங்களைச் செய்து மக்களால் பாராட்டப்படல், பொதுஜன நன்மைக்காக குளம், கிணறு, சத்திரம், சாவடி நிர்மாணித்தல், அதனால் புகழ் பெறுதல், மறைந்திருந்த தனம் கிடைத்தல், லாட்டரி, பந்தயம் போன்றவற்றில் வெற்றி.

சுரங்கப் பொருள்களால் மலையில் உண்டாகும் பொருள்களால், நவதான்யங்களால், எள் எண்ணை வியாபாரங்களால் அதிகமான லாபம் கிடைத்தல்.

தோல், எரு, பழைய இரும்புச் சாமான்கள் அல்லது பழைய பொருட்கள், எலும்பு, மாமிசம், இடிந்த கட்டிடங்கள், உடைந்த வாகனங்கள். பழுதுபட்ட யந்திரங்கள் போன்ற உதவாத குப்பைகளை மொத்தமாக வாங்கி அமோக விலைக்கு விற்று அதிகமான லாபம் அடைதல், கலப்படமான உலோகங்களை வாங்கி சுத்தி செய்து விற்பதால் அதிகமான லாபம் அடைதல், குப்பை வியாபாரம், நகரசுத்தி காண்ட்ராக்டுகள், சாக்கடை கட்டுதல், இரும்புப் பாலம் கட்டுதல் இவற்றால் அடையும் லாபங்கள்.

ஆட்டு உரோமம், கம்பளி, கட்டைகள், விறகு, கிழங்குகள், மலைகளில் விளையும் பொருள்கள், கள்ளக் கடத்தல் போன்ற வியாபாரங்கள் முதலியவற்றால் பணம் சேகரித்தல், குறைந்த உழைப்பில் அதிகமான லாபம் பெறும் சாமர்த்தியம், குடும்பத்தில் சந்தோஷம், மனைவி மக்கள், வேலைக்காரர்கள், கீழ்ச்சாதி மக்கள் இவர்களால்

லாபங்கள், தரகு வேலை, கார்கள், யந்திரங்கள் போன்றவை தயாரித்தல் இவற்றால் ஏற்படும் லாபங்களும் சனிபகவான் நல்ல விதமாக அமைந்திருந்தால் கொடுக்கும் பலன்களாகும்.

சனீஸ்வரனால் ஏற்படும் கெடுதல்கள்

திடீரென்று பொருள் நஷ்டம், அதனால் ஏற்படும் அவமானங்கள், பந்துமித்திரர்கள் மற்றும் வேண்டியவர்களுடன் விரோதம் பல பேரின் கோபத்திற்கும், வெறுப்புக்கும் ஆளாதல், பூமி பயிர் பச்சை சேதமடைதல், பதவி பறிபோதல், இருக்குமிடத்தை விட்டு ஓடவேண்டிய நிலைமை, ஒளிந்து மறைந்து திரிய வேண்டிய கஷ்டங்கள், ஆள் இருக்குமிடம் தெரியாமல் மறைந்து வாழ வேண்டிய நிலைமை, தரித்திரம் காரணமாக உண்டாகும் கர்ம ரோகங்கள், அதிக பசி, அதிக கோபம், அதிக காமம், பொறாமை, அசூயை முதலியவற்றால் துன்பங்களுக்கு ஆளாதல் தன்னுடைய உருவமே மாறி விகாரமாக போகும் நிலைமை பிறர் நன்றாக இருப்பதைக் கண்டு, பொறாமை கொண்டு அவர்களுக்குக் கெடுதல் மோசடி, ஏமாற்று, பித்தலாட்டம் செய்யும் புத்தி, மற்றவர்கள் கஷ்டப்படுவதைக் கண்டு தான் திருப்தியடையும் மனோபாவம், பொய்ச் சாட்சி சொல்லுதல், கள்ளக் கையெழுத்துப் போடுதல், திருட்டு, வழிப்பறி, கொலை போன்ற பாதகங்களை துணிந்து செய்தல் இவையெல்லாம் சனி பகவானால் ஏற்படும் கெடுதல்களாம்.

மேலும் கர்ம நோய்களால் ஏற்படும் துன்பங்கள், கை கால் முடக்கம், யானை, கரடி, எருமை, பன்றி, நாய் போன்ற கறுப்பு நிற மிருகங்களால் ஆபத்து உண்டாதல், மிஷின்கள் போன்றவற்றில் கை கால் அகப்பட்டுத் துண்டித்துப் போதல், சகல பொருள்களையும் இழந்து தான் ஒன்றும் இல்லாதவன் என்று இன்சால்வென்டு

சான்று வாங்கி தப்பித்துக் கொள்ளுதல், பிச்சை வாங்கிப் பிழைத்தல் கெட்ட நடத்தையுள்ள பெண்களின் சகவாசம், அற்பர்களிடம் வேலை செய்து அவர்கள் போடும் பிச்சைக் காசால் பிழைத்தல், அடிமையாக நடத்தப்படுதல், ஆதரவற்றவராக விடப்படுதல், வாகனங்களால் விபத்துக் குள்ளாதல், உடல் நடுக்கம், தலை கை கால்கள் நடுக்கம் வாய் குளறல், பயம், பேய், பிசாசு, பில்லி சூன்யத்தால் ஏற்படும் தொல்லைகள், மனம் கூசாமல் பாவங்களைச் செய்தல், சிறை தண்டனை, அதிகாரிகளால் அடிபடுதல், பொது ஜனங்களால் அபவாதம், கல்லெறி போன்ற துன்பங்களுக்கு ஆளாதல் இவையெல்லாம் சனி பகவானால் ஏற்படும் கெட்ட பலன்களாம்.

சனி பகவான் எப்படிப்பட்டவர்களையும் ஒரு கண நேரமாயினும் பிடித்து ஆட்டி வைத்து விடுவான் என்பதற்கு பல கதைகள் உள்ளன.

இராவணன் கதை

இராவணன் ஒன்பது கிரகங்களையும் தன் சிம்மாசனத்தின் கீழ் படிக்கற்களாகப் போட்டு அவர்களின் மேல் காலை வைத்து ஏறிச் சென்று சிம்மாசனத்தில் அமர்வது வழக்கம். ஒரு நாள் அதைப் பார்த்த நாரதா சனி மட்டும் குப்புறப்படுத்திருப்பதைப் பார்த்து, "இராவணா! எல்லோர் மார் மேலும் காலை வைத்து ஏறிச் செல்வதல்லவா கம்பீரம்? இவன் மட்டும் ஏன் குப்புறப்படுத்திருக்கிறான். திருப்பிப் படுக்கச் சொல்" என்றாராம்.

இராவணன் சனி பகவானைத் திரும்பிப்படுக்கச் சொன்னவுடன் சனி பார்வை அவன் மேல் விழ அன்று முதல் அவனுக்கு அழிவு காலம் தொடங்கியது.

சித்திரக் கிளியின் கதை

ஒரு அரசனும், புலவரும் மிக மிக நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். சனி பகவான் புலவரிடம் வந்தான். நான் உன்னை ஏழரைச் சனியாகப் பிடிக்கப்போகிறேன். நீர் மிகவும் நல்லவராக இருப்பதால் உம்மை எச்சரிக்க வந்தேன் என்றான்.

புலவர் சனீஸ்வரன் காலடியில் விழுந்து, ''ஐயோ! நான் சக்தியில்லாதவன். நான் தாங்க மாட்டேன். என்னை நீங்கள் பிடிக்கக்கூடாது,'' என்று! கெஞ்சி அழுதார்.

''சரி ஏழரை வருஷம் வேண்டாம், ஏழரை மாதமாவது உன்னைப் பிடிக்கிறேன்,'' என்றார் சனிபகவான்.

அவ்வளவு நீண்ட காலம் என்னால் துன்பத்தைத் தாங்க முடியாது. நான் இறந்தே போவேன்.'' என்று கூறி அழுதார் புலவர்.

கடைசியாக ஏழரை நாழிகை நேரம் மட்டும் அவரைப் பிடிப்பதாகக் கூறி மறைந்துவிட்டார் சனி.

புலவர் கவலையுடன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து மன்னர் அனுதாபத்துடன் விசாரித்தார். புலவர் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழிக்க முயன்றார். இந்தச் சமயத்தில் மகாராணியிடமிருந்து ஆள்வர மன்னர் தன் கையில் இருந்த முத்திரை மோதிரத்தை அப்படியே மேஜை மேல் வைத்து விட்டு எழுந்து போய்விட்டார்.

புலவர் செக்கச் செவேல் என்று பிரகாசித்த, முத்திரை மோதிரத்தில் பதிக்கப்பட்டிருந்த நவரத்தினக் கற்களைப்

பார்த்தார். சுவற்றில் மாட்டப்பட்டிருந்த சித்திரக் கிளியின் சிவந்த அலகைப் பார்த்தார். புலவரல்லவா: அவர் மனதில் ஒரு விபரீதமான ஆசை உண்டாயிற்று,'' ''சித்திரத்துக் கிளியே! ரத்தினத்தைக் கொத்தே.'' என்றார். அவ்வளவு தான் சித்திரக்கிளி பறந்து வந்து மோதிரத்தைக் கொத்திக் கொண்டு போய்விட்டது.

அரசர் வந்தார், மோதிரத்தைக் காணவில்லை, திடுக்கிட்டார், புலவர் தனக்கு விரோதமாக சதி செய்பவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்று நினைத்து விட்டார்.

காவலர்கள் வந்தனர், கவி பாடும் புலவனுக்குக் கை விலங்கு போட்டனர். இழுத்துக் கொண்டு போய் நடு முற்றத்தில் நிற்க வைத்து கசையாலும் அடித்தனர். உண்மையைச் சொல்லி விடு. மோதிரத்தை என்ன செய்தாய்? என்று கர்ச்சித்தான் மன்னன்.

ஏழரை நாழிகை கழிந்தது. புலவருக்கு நினைவும் வந்தது, ''நிறுத்துங்கள், நிறுத்துங்கள் சொல்லி விடுகிறேன். என்று அலறினார், தன்னை முன்பு இருந்த அறைக்கு அழைத்துக் கொண்டு போகச் சொன்னார். சித்திரத்தின் கிளியே ரத்தினத்தைக் கக்கு,'' என்றவுடன் கிளி பறந்துவந்து மோதிரத்தை மேஜைமேல் வைத்துவிட்டு மறுபடியும் போய் படமாக உட்கார்ந்து விட்டது.

இதைப் போன்ற பல கதைகள் வழக்கத்தில் உள்ளன.

தசரதனும் சனிபகவானும்

ஒருநாள் தசரதன் ராஜசபையில் வீற்றிருக்கும்போது வசிஷ்டர் அவனைப் பார்த்து, ''அரசே! சனிபகவான்

இன்னும் சில நாட்களில் ரோகிணி நட்சத்திரத்தில் பிரவேசிக்கப் போகிறார். அதனால் பனிரெண்டு ஆண்டுக் காலம் நீடிக்கக்கூடிய கொடிய பஞ்சம் ஏற்படப் போகிறது.'' என்று கூறினார்.

தசரதன் தன் குல குருவைப் பார்த்து, ''பகவானே! அதைத் தடுக்க வழியே இல்லையா?'' என்று கேட்டார்.

''சனிபகவான் அளவற்ற வலிமை உடையவன். அவனைத் தடுக்க யாராலும் முடியும் என்று நான் நினைக்கவில்லை,'' என்று வசிஷ்டர் கூறினார்.

ஆனால் தசரதச் சக்கரவர்த்தி மனம் தளர்ந்துவிட வில்லை தன்னுடைய அற்புதமான வில்லையும், அநேக திவ்ய அஸ்திரங்களையும் எடுந்துக் கொண்டு ரதத்தில் ஆரோகணித்து வான வீதியை நோக்கி ரதத்தைச் செலுத் தினார். வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த ரோகிணி நட்சத்திரத்தின் அருகில் வந்ததும் தனது வில்லில் அம்பைப் பூட்டிக் கொண்டு சனி பகவான் எங்கே வருகி றார் என்பதை நாலாபக்கங்களிலும் பார்த்தபடி யுத்தத் திற்குத் தயாராக நின்றார்.

சனி பகவான் மெல்ல எட்டிப் பார்த்தார். தசரதன் அல்லவா நிற்கிறான். மஹாவிஷ்ணுவே அல்லவா இவனுக்கு மகனாகப் பிறக்கப் போகிறார். இவனை என்ன செய்வது என்று யோசித்தான். புன்னகை புரிந்தபடி. ''தசரதா! என்னோடு போருக்கா வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான்,

தசரதன் கைகூப்பி வணங்கினான். ''சனி பகவானே! உன்னை ஸ்தோத்திரம் செய்கிறேன்,'' என்று கூறிப் பின் வரும் ஸ்தோத்திரத்தைக் கூறினான்.

சனீஸ்வர ஸ்தோத்திரம்

ஸ்ரீ கணேசாய நம: அஸ்ய ஸ்ரீ சனைச்சர ஸதோத்தர மந்த்ரஸ்ய தசரத ரிஷி: சனைச்சரோ தேவதா!

த்ரிஷ்டுப்சந்த: சனைச்சர ப்ரீத்யர்த்தம் ஜயேவினியோக. தசரத உவாச—

கோணாந்த கோ ரௌ த்ரய மோசகேத பப்ரு:
க்ருஷண, சநி: பிங்கள மந்த ஸௌரி:
நித்யம் ஸம்ருதோ யோ ஹரதோ பீடாம்
தஸ்மை நம: ஸ்ரீ ரவி நந்தனாய ||

நரா நரேந்த்ரா: பசவோ ம்ருகேந்த்ரா
வன்யாச்ச யே கீட பதங்க ப்ருங்கா:
பீடயந்தி ஸர்வே விஷ மஸ்தி தேன
தஸ்மை நம: ஸ்ரீ ரவி நந்தனாய |

தேசாச்ச துர்காணி வனானி யத்ர
ஸேனாதி வேசா! புரபத்தனானி
பீடயந்தி ஸர்வே விஷமஸ்தி தேன
தஸ்மை நம, ஸ்ரீ ரவி நந்தனாய |

திலைர்யவைரீ மர்ஷ குடான்ன தானை:
லோஹேன நீலாம்பரதான தோ வா
ப்ரீணாதி மந்த்ரைர் நிஜ வாஸரே ச
தஸ்மை நம : ஸ்ரீ ரவி நந்தனாய ||

ப்ரயாக கூலே யமுனா தடேச
ஸரஸ்வதீ புண்ய ஜலே குஹாயம்
யோ யோகினாம் த்யான கதோ Sபி ஸூக்ஷ்ம:
தஸ்மை நம: ஸ்ரீ ரவி நந்தனாய ||

அந்ய ப்ரதேசாத் ஸ்வக்ருஹம் ப்ரவிஷ்ட—
ஸ்ததீய வாரே ஸதர : ஸுகீ ஸ்யாத்
க்ருஹாத் கதோ யோ ந புந: ப்ராயாதி
தஸ்மை நம: ஸ்ரீரவி நந்தனாய ||

ஸ்ரஷ்டா ஸ்வயம் பூர் புவனத்ரய யஸ்ய
த்ராதா ஹரீசோ ஹரதே பிநாகீ,
ஏகஸ்த்ரிதா ருக்யஜுஸ் ஸாம மூர்த்தி ।
தஸ்மை நம: ஸ்ரீரவி நந்தனாய ||

சன்யஷ்டகம் ய: ப்ரயத: ப்ரபாதே
நித்யம் ஸுபுத்ரை: பசு பாந்த வைச்ச
படேத்து ஸௌக்கியம் புவி யோகயுந்த,
ப்ராப்நோதி நிர்வாண பதம் ததந்தே
கோணஸ்த: பிங்களோ பப்ரு: ||
க்ருஷ்ணோ ரௌத் ரோபிந்த கோ யம:
ஸௌரி: சனைச்சரோ மந்த:
பிப்பலா தேன ஸம்ஸ்துத:
ஏதாநி தச நாமாநி ப்ராதருத்தாய ய: படே
சனைச்சரக்ருதா பீடாந கதாசித் பவிஷ்யதி

ஸ்ரீ சனைச்சர ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

சனீஸ்வரனுக்கு மனம் குளிர்ந்து போய் விட்டது. "தசரதா! உன்னுடைய ஸ்தோத்ரம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. என்னை இவ்வாறு துதிக்கும் காரணமென்ன? உனக்கு என்ன வேண்டும் கேள் தருகிறேன்?" என்று கேட்டான்.

'சனி பகவானே! நீங்கள் ரோகிணி நட்சத்திரத்தில் பிரவேசிப்பதால் நாட்டில் கொடிய பஞ்சம் உண்டாகும். ஜனங்கள் பனிரெண்டு வருஷ காலம் நீண்ட துன்பத்தை

அடைவார்கள் என்று சொல்கிறார்கள். பிரஜைகளைக் காப்பது மன்னனின் கடமையல்லவா? அதனாலேயே தங்களிடம் வந்தேன்!' என்றான் தசரதன்.

'தசரதா! உன் நாட்டு மக்களுக்கு ஒரு துன்பமும் ஏற்படாது. தவிர இந்த ஸ்தோத்திரத்தை ஒரு முறை சொல்பவர்களைக் கூட நான் துன்புறுத்தமாட்டேன். அவர்கள் வாழ்நாட்காலம் முழுவதும் என்னால் ஏற்படக் கூடிய இடையூறுகளைப் பற்றி அஞ்சாமல் எவ்வித பயமும் இல்லாமல் இருக்கலாம். நீ தைரியமாகச் சென்று வா,' என்று கூறி விடை அளித்தான் சனீஸ்வர பகவான்.

சனி பகவானை முழுவதுமாக வெற்றி கொண்டு அவரால் எவ்வித இடையூறும் நேரிடாதபடி தடுப்பதற்கு தசரத மன்னன் ஒருவனால் மட்டுமே முடிந்தது.

சனீஸ்வர அஷ்டோத்ர சத நாமாவளி

ஓம் பிராம் பிரீம் பிரௌம் சம் என்று ஒவ்வொரு நாமத்திற்கும் முன்பு சேர்ந்து படிப்பது சிறந்தது.

ஓம் சனைச்சராய நம
,, சாந்தாய ,,
,, ஸர்வாபீஷ்டப்ரதாயிநே நம ,,
,, சரண்யாய ,,
,, வரேண்யாய ,,
,, ஸர்வேசாய ,,
,, ஸௌம்யாய ,,
,, ஸுரவந்த்யாய ,,
ஸுரலோகவிஹாரிணே ,,
,, ஸுகாஸநோபவிஷ்டாய ,, (10)

,, ஸுந்தராய நம
,, கநாய ,,
,, கநரூபாய ,,
,, கநாபரணதாரிணே ,,
,, கநஸாரவிலேபாய ,,
,, கத்யோதாய
,, மந்தாய ,,
,, மந்தசேஷ்டாய ,,
,, மஹநீயகுணாத்மநே ,,
,, மர்த்யபாவநபாதாய ,, (20)

,, மஹேசாய நம
,, சாயாபுத்ராய ,,
,, சர்வாய ,,
,, சததுரணீசதாரிணே ,,
,, சரஸ்த்திரஸ்வபாவாய ,,
,, அசஞ்சலாய ,,
,, நிலவர்ணாய ,,
,, நித்யாய ,,
,, நீலாஞ்ஜநநிபாய ,,
,, நிலாம்பர விபூஷாய (30)
,, நிஸ்சலாய ,,
,, வேத்யாய ,,
,, விதிரூபாய ,,
,, விரோதாதாரபூமயே ,,
,, பேதாஸ்பதஸ்பாவாய ,,
,, வஜ்ரதேஹாய ,,
,, வைராக்யாய ,,
,, வீராய ,,
ஓம் வீதரோகபயாய நம
,, விபத்பரம்பரேசாய ,,
(40)
ஓம் விச்வ வந்த்யாய நம
,, க்ருத் ரவாஹாய ,,
,, கூடாய ,,
,, கூர்மாங்காய ,,

,, குரூபிணே ,,
,, குத்ஸிதாய ,,
,, குணாட்யாய ,,
,, கோசாராய ,,
,, அவித்யாமூலநாசாய ,,
,, வித்யா வித்யா ஸ்வரூபிணே நம
(50)
,, ஓம் ஆயிஷ்யகாரணாய நம
,, ஆபதுத்தர்த்ரே ,,
,, விஷ்ணுபக்தாய ,,
,, வசிநே ,,
,, விவிதாகமவேதிநே ,,
,, விதிஸதுத்யாய ,,
,, வந்த்யாய ,,
,, விரூபாக்ஷாய ,,
,, வரிஷ்ட்டாய ,,
,, கரிஷ்டாய ,,
(60)
,, ஓம் வஜ்ராங்குசதராய நம
,, வரதாபயஹஸ்தாய ,,
,, வாமநாய ,,
,, ஜ்யேஷ்டாபத்நீஸமேதாய ,,
,, ச்ரேஷ்டாய நம
,, மித பாஷிணே ,,

,, கஷ்டௌக்நாசகர்த்ரே ,,
,, புஷ்டிதாய ,,
,, ஸ்துத்யாய ,,
,, ஸ்தோத்ர கம்யாய ,,
(70)
ஓம் பக்திவச்யாய நம
ஓம் பாநவே ,,
ஓம் நனு புத்ராய நம
,, பவ்யாய ,,
பாவநாய ,,
,, தநுர்மண்டல ஸம்ஸ்த் தாயநம
,, தநதாய நம
,, தநுஷ்மதே
,, தநுப்ரகாசதேஹாயநம
,, தாமஸாய ,,
(80)
,, அசேஷஜநவந்த்யாய ,,
,, விசேஷ பலதாயிநே ,,
,, வசீக்ருத ஜநேசாய ,,
,, பசூநாம் பதயே ,,
,, கேசராய ,,
,, ககேசாய ,,
,, கநீலாம்பராய ,,
,, காடிந்யமாகஸாய ,,

,, ஆர்யகணஸ்துத்யாய ,,
,, நீலச்சத்ராய ,, (90)
,, நித்யாய ,,
,, நிர்குணாய ,,
,, குணாத்மதே ,,
,, நிராமயாய ,,
,, நந்த்யாய ,,
,, வந்தநீயாய ,,
,, தீராய ,,
,, திவ்ய தேஹாய ,,
தீநார்த்திஹரணாய ,,
,, தைத்யநாசகராய ,, (100)
,, ஆர்யஜநகண்யாய ,,
,, க்ரூராய ,,
,, க்ரூரசேஷ்டாய ,,
,, காமக்ரோதகராய ,,
,, களத்ரபுத்ரசத்ருத்வ காரணயா நம
,, பரிபோஷிதபக்தாய நம
,, பரபீதிஹராய ,,
,, பக்தஸங்கமநோபீஷ்ட பலதாய ,,
,, ஸ்ரீமத் சனைஸ்வராய ,, ,,
(110)

சனீஸ்வர் அஷ்டோத்திரம் சமாப்தம்

தினசரி துதி செய்ய ஸ்லோகம்

ஏழரை சனி, அஷ்டமச் சனி, கண்டகச் சனி பீடைகளால் துன்புறுகிறவர்கள் தினசரி அதிகாலையில் சனி பகவான் அல்லது நவக்கிரகங்களைச் சுற்றியபடி சொல்ல வேண்டிய ஸ்லோகம். இவ்வாறு தினசரி சனிபகவானை துதிப்பதால் அபரிமிதமான பலனை அடையலாம்.

நமஸ்தே! கோணஸம்ஸ்தாய! பிங்களாய? நமோஸ்துதே!
நமஸ்தே! பப்ருரூபாய! கிருஷ்ணாயச! நமோ நம:
நமஸ்தே! ரௌத்ரதேஹாய! நமஸ்தே! சாந்தகாயச!
நமஸ்தே! யமசஞ்ஞாய! நமஸ்தே! சௌரயேவிபோ!
நமஸ்தே! மந்தசஞ்ஞாய! சனைச்சர்ய! நமோஸ்துதே!
பிரசாதம் மம தேவேஸ தீனன்ய பிரணதஸ்யா!

''நவக்கிரக அனுகூல சித்திரஸ்து''

சகல காரியங்களும் சித்தியாக சனிபகவானைக் குறித்து ஸ்தோத்திரம் செய்ய ஸ்லோகம்.

நீல ம்பரோ நீலவபு கிரீடீக்ருத்ரஸ்திதஸ் தாபவரோ தனுஷ்மான்
சதுர்புஜ சூர்யசுத: பிரசன்ன ததாதம்யம் வரத ||

—:—

''ஸ்ரீ காயத்ரீ''

காக த்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி
தன்னோ மந்த. பிரசோ தயாத்

ஜெபம்

சனி பகவானைக் குறித்து ஜெபம் செய்து அருள்பெற விரும்புபவர்கள் கீழ்க்கண்ட மந்திரத்தை 19,000 தடவை ஜெபம் செய்ய வேண்டும். சனிபகவான் தன்னை யந்திர ரூபமாக ஸ்தாபித்துக் கொண்டு அனுக்கிரக மூர்த்தியாக எழுந்தருளியுள்ள திருநள்ளாறு க்ஷேத்திரத்தில் இந்த ஜெபம் செய்வது விசேஷம். சனி திசை சனி புத்தி நடைபெறுபவர்கள் பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் இந்த ஜெபம் செய்வது மிகவும் நல்லது. எள்ளு எண்ணெய் கறுப்பு அல்லது நீல வஸ்திரம் தானம் செய்ய வேண்டும்.

ஓம் க்ராம் க்ரீம் க்ரௌம்ச: சனியே நம:

சனி ப்ரீதிக்காக சனிவாரம் விரதமிருப்பவன் அன்றைக்கு சிவாலய வழிபாடு நவக்கிரகங்களைச் சுற்றி வருவதுடனும் சனிபகவானுக்கு முன்பாக நல்லெண்ணெயில் ஊறிய எள்ளுப் பொட்டலத்தை தீபமாக ஏற்றி வைப்பதும் மிகவும் நல்லது. இதனால் சனிபகவானால் ஏற்படக்கூடிய சகல துன்பங்களும் நீங்கி நன்மை உண்டாகும்.

இராகு

இராகு, கேதுகளுக்கு சித்தர்கள் தனியாக எண் சக்கரம் கொடுக்கவில்லை. ஆயினும் நவக்கிரகங்களுக்கு உரியதும், ஆயுள் ஆரோக்கியத்திற்கு விருத்தி தருவதுமான பொதுவான சக்கரத்தை உபயோகப்படுத்தலாம். மோதிரச்சக்கரத்தையும் பயன்படுத்தலாம்.

ஐந்து கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக வெட்டும்படி நான்கு கட்டங்கள் வரும்படியாக பீடம் அமைத்து அதில்

ஒன்று முதல் எட்டுவரையும் இருபத்தி மூன்று முதல் முப்பது வரையும் உள்ள எண்களை எப்படிக்கூட்டினாலும் அறுபத்திரண்டு வரும்படியாக அமைப்பது இந்தச் சக்கரம்.

பேட்டி 62

23	30.	2	7.
6.	3.	27	26
29.	24	8	1
4	5	25	28.

இராகுவால் ஏற்படும் சுப பலன்கள்

இராகு, கேதுகளுக்கு பனிரெண்டு ராசிகளில் சொந்த வீடு, உச்சவீடு என்று கிடையாது: இவை சாயா கிரகங்கள். ஆயினும் இவற்றுக்கு சனி, சுக்கிரன் நட்புக் கிரகங்களாகவும். சூரியனும், சந்திரனும், பகை கிரகங்களாகவும் கருதுகின்றனர். இராகுவும், கேதுவும் ஜாதகத்தில் தாங்கள் அமைந்துள்ள ஸ்தானத்திற்குத் தகுந்தபடியாகவும் தங்களோடு சேர்ந்த அல்லது தங்களைப் பார்த்த கிரகங்களுக்குத் தகுந்தபடியாகவும் பலன்களை அளிப்பார்கள்.

சூரிய சந்திரர்களையே மறைக்கத்தக்க வல்லமை படைத்தவர்களாகையால் சாயா கிரகங்கள் ஆனபோதிலும் மிகவும் சக்திவாய்ந்த கிரகங்களாகவும் நல்லது செய்வ

தானாலும், கெட்டது செய்வதானாலும் மிகவும் அதிகமான பலன்களைக் கொடுப்பவர்களாகவும் கருதப்படுகிறார்கள். ஒருவருடைய ஜாதகத்தில் இராகு நன்றாக அமைந்திருந்தால் அவர் அமைந்துள்ள பலத்திற்குத் தகுந்தபடி திடீரென்று தூக்கி இராஜ சிம்மாசனத்தில் உட்கார வைத்தாலும் வைத்துவிடுவார். ராஜயோகம் யானை குதிரைப் பின் தொடர சங்கு சேகண்டி முழக்கத்தோடு பவனி வரத்தக்க யோகத்தைக் கொடுக்குமென்று ரிஷிகள் கூறுகிறார்கள். மேஷ, கடகம், கன்னி, மகரம், ரிஷபம், துலாம் ஆகிய ராசிகளில் அமைந்த இராகு நன்மை செய்வார் என்று பொதுவான அபிப்பிராயம் உள்ளது.

இராகு நன்மை தரும் காலத்தில் திடீரென்று பதவி உயர்வு, எதிர்பாராத விதமாக தனலாபங்கள், அந்நிய நாடுகளிலும் புகழும் செல்வாக்கும் பெறுதல், அந்நிய நாடுகளிலிருந்து வருமானங்கள், பிற மதத்தவர்கள், பிற மொழி பேசுகிறவர்கள், ஜாதி ஆச்சாரம் இல்லாத மக்கள் முதலானவர்களால் எதிர்பாராத விதமாக லாபங்கள் உண்டாகும். அந்நிய நாடுகளுக்குச் சென்று அபரிதமான பொருள் ஈட்டும் வாய்ப்பு ஏற்படலாம், இரசாயனப் பொருள்கள், சினிமா படம் எடுத்தல், எந்திரங்கள், எலக்ட்ரானிக் கருவிகள் போன்றவற்றாலும் லாபம் உண்டாகும். விஷம் சம்பந்தமான ஆராய்ச்சிகள் அல்லது பொருள்கள், வாகனங்கள் பளபளப்பாகவும் ஒடி மறைந்தும், பிறகு திடீரென வெளிப்பட்டும் செயலாற்றும் கருவிகள் அல்லது பொருள்கள் இவற்றாலும் லாபம் உண்டாகும். அரசியல் முதலாக சுரங்கத் தொழில் வரை அவரவர் ஜாதக பலத்திற்குத் தகுந்தபடியாக பலவிதமான தொழில்களிலும் வெற்றி பெற்று ஏராளமான பொருள் சம்பாதிக்கலாம்.

இராகு தீய இடத்தில் தீயவர்களால் பார்க்கப்பட்டிருந்தால் கள்ளக்கடத்தல் சூதாட்டம், திருட்டு, புரட்டு,

மோசடிகள், விபச்சாரம் போன்ற தொழில்களாலும் பணத்தைச் சேகரிப்பார் என்று சொல்லப்படுகிறது.

இராகு ஞானகாரகன் என்று கூறப்படுகிறது. இதற்கு இரு வகைகளில் பொருள் கொள்கின்றனர். அதாவது அளவுக்கதிகமாகக் கஷ்டத்தைக் கொடுத்து ஞானம் உண்டாகச் செய்வார் என்பது சிலர் கருத்து. கஷ்டப்படுகிறவர்கள் எல்லோருக்கும் ஞானம் உண்டாகி விடுவதில்லை. அந்த வகையில் இது இராகுவினால் ஏற்படும் நன்மை என்று எடுத்துக் கொள்ளலாம். இன்னொரு சாரார் அளவு கடந்த நூல் ஆராய்ச்சியினால் மறை பொருளான உண்மைகளை கண்டு பிடித்தும் தத்துவ சிந்தனை மேலிட்டும் ஞானவான் ஆகலாம், அதற்கு பொருளாதாரக் கஷ்டம் ஒரு ஆதாரமாக இருக்க வேண்டிய தில்லை என்று கூறுகின்றனர். இரண்டும் சரியாகத்தான் இருக்க வேண்டும்.

இராகுவால் ஏற்படும் தீய பலன்கள்

சர்ப்ப பயம், அக்னி பயம், கள்வரால் பயம், இவற்றால் அபாயம் ஏற்படுதல், பொருள் நஷ்டம், வியாபாரத்தில் பெரிய நஷ்டம் ஏற்பட்டு திடீரென்று தரித்திர நிலைக்கு தள்ளப்படுதல், கரையான், பூச்சி விழுதல், விஷக் கிருமிகள் போன்றவற்றால் பொருள்கள், பயிர் பச்சைகள் நாசமடைதல், வீடு இடிந்து விழுதல், யுத்தத்திற்கு உள்ளாதல் போன்றவற்றால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள், திடீரென்று பதவி பறிபோதல், ஆள் அட்ரஸ் இல்லாமல் ஒளிந்து மறைந்து திரிய நேர்தல், சிறைவாசம், தண்டனை அடைதல். சூத்தர மக்கள் அந்நிய மதத்தவர்களிடையே கேவலமான நிலையில் வசிக்க நேர்தல், அம்மை, காலரா போன்ற விஷக் கிருமிகள் சம்பந்தமான நோய்களால் தாக்கப்படுதல், சரும

ரோகங்கள், தோல் உரிதல், நிறம் மாறுதல் மனைவி மக்களுக்கு நோய் நொடி கண்டங்கள் அவர்களை விட்டும் பிரிந்து வாழ நேர்தல், யந்திரங்களால், வாகனங்களால் வெடி மருந்து மின்சாரம் .போன்றவற்றால் அபாயங்கள் முதலானவையும் இராகுவினால் ஏற்படும் கெட்ட பலன் களாம்.

இராகு கெட்ட ஸ்தானத்தில் இருந்தால் மட்டும் இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும் என்று நினைக்கக் கூடாது, தக்க பரிகாரம் செய்து கொள்வதாலும், தியானம், உபவாசம் முதலானவற்றாலும் தங்களுக்கு ஏற்படக்கூடிய கெடுதல்களைக் குறைத்து அல்லது தடுத்துக் கொள்ளலாம்.

இராகு ஸ்தோத்திரம்

ராஹுர் தானவ மந்த்ரீ கஸிம் ஹிகா சித்த நந்தன:
அர்த்தகாய: ஸதா க்ரோதீ சந்த்ராதித்ய விமர்தன:
ரௌத்ரோ ருத்ர ப்ரியோ தைத்ய: ஸ்வர் பானுபீதித:
க்ரஹராஜ: ஸுதாபாயீ ராகாதித்ய பிலாஷுக:
கால த்ருஷ்டி காலரூப: ஸ்ரீ கண்ட ஹ்ருதயாச்ரய:
விதுந்துத: ஸைம் ஹிகேயோ கோர ரூபோ மஹாபல:
க்ரஹ பீடாகரோ தம்ஷ்டரீ ரக்தநேதரோ மஹோதர:
பஞ்ச விம்சதி நாமானி ஸம்ருதவா ராஹும் ஸதா நர:
ய: படேன் மஹதீ பீடாதஸ்ய நச்யதி கேவலம்
ஆரோக்யம் புத்ர மதுலாம் சரியம்தான்யம் பசும்ஸ்ததா
ததாதி ராஹுஸ்தஸ்மை ய: படதே ஸ்தோத்ரமுத்தமம்
ஸததம் படதே யஸ்து ஜீவேத் வர்ஷசதம் நர:
ராஹு ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

இராகு காயத்ரீ

நக த்வஜாய வித்மஹே பத்ம ஹஸ்தாய தீமஹி
தன்னோ ராகு: ப்ரசோதயாத்

செல்வத்தை விரும்புபவன் துர்க்கையை குறித்து தியானம் செய்ய வேண்டும் என்று சொல்வர். இராகு திசை நடக்கும் பொழுது துர்க்கையைத் தொழ வேண்டும் என்றே சொல்வர், ராகுவுக்குரிய தேவதை துர்க்கையே, துர்க்கா கோயில்களில் இராகு கால பூஜை நடைபெறுவது எல்லோரும் அறிந்ததே. தரித்திரம் நீங்கி செல்வ வசதி உண்டாக இராகுவைக் குறித்து செய்ய வேண்டிய தியான ஸ்லோகம்.

கராள வதனம, கட்கம் சர்ம சூலவரன்விதம் பிரசன்ன :
நீலசிம்ஹாஸ னாஸ்தம்ச தியாயேத் ராகும் பிரசாந்தயே !!

ராகுவைக் குறித்து பிரார்த்தனை செய்ய உரிய மந்திரம்,

ஓம் ப்ராம் ப்ரீம் ப்ரௌம்ச ராஹவே நம :

இராகுவால் நன்மை பெற துர்க்கா பூஜை. ஜெபம் பதினெட்டாயிரம் தடவை செய்து உளுந்து தானம் செய்ய வேண்டும். ராகுவுக்குரிய ரத்தினம் கோமேதகம் ஆகை யால் அதை அணிவது நல்லது.

கேது

கேது செவ்வாய் தருவதைப் போன்ற பலன்களைத் தருவார் என்று பொதுவாகச் செல்வார், ஆயினும் கேதுவை சுபக்கிரகமாகவே எடுத்துக் கொள்வது முண்டு. மோட்ச காரகன் என்றும் சொல்வர். குரு வீட்டிலிருந்தாலும் அல்லது குருவோடு சேர்ந்தோ பார்க்கப் பட்டோ இருந் தாலும் கேது கெடுதல் செய்ய மாட்டார் என்பதுவும் பொதுவான கருத்து.

கேது சுக்கிரனோடு கூடி நல்லவிதமாக அமைந்திருந்தால் அச்சுத் தொழில் புகைப்படம் எடுத்தல், சினிமாத் தொழில் முதலான வற்றில் அளவுகடந்த நன்மையும், செல்வமும் புகழும் உண்டாகும் என்று சொல்வர்.

கேது 39

14.	9	16
15	13.	11
10	17	12

கேதுவால் ஏற்படும் சுப பலன்கள்

ஒரு ஜாதகத்தில் கேது நன்றாக அமைந்திருந்தால் ரசவாதம் செய்தல், ராசாயனப் பொருள்கள் சம்பந்தமான ஆராய்ச்சி, புதை பொருள் ஆராய்ச்சி, மங்கி மறைந்து போன பொருள்களை வெளிப்படுத்துதல் உலைக்களங்கள் ரயில் என்ஜின், உருக்கி வார்த்தல், அந்தரத்தில் செல்லும் அல்லது செலுத்தப்படும் பொருள்கள், அச்சுத்தொழில், மை தயாரித்தல், படச்சுருள் தயாரித்தால், புகைப்படம் எடுத்தல், எக்ஸ்ரே போன்ற கதிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சி முதலான துறைகளில் அளவுகடந்த வெற்றியும் புகழும் கிட்டும். அந்நிய ஜனங்களால் ஐரோப்பியர், கிறிஸ்துவர் போன்றவர்களால் லாபங்கள் உண்டாகும். தோல் பதனிடுதல், மீன் மாமிசம் போன்றவற்றை டப்பி களில் அடைத்து ஏற்றுமதி செய்தல், அல்லது மீன் மாமிசம்

போன்றவற்றில் வியாபாரம், மருந்து அரைத்தல், கஷாயம் லேகியம் போன்றவற்றை தயாரித்தல், யோகாப் பியாசம். சிலம்பு வித்தை, சர்க்கஸ் வேலைகள், வாயு ஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம் போன்றவற்றால் மற்றவர்கள் கண்டு திகைக்கும் படியான காரியங்களைச் செய்தல், நீர்மேல் நடத்தல், நெருப்பில் அபாயமின்றிச் செல்லுதல் உயரத்திலிருந்து தொங்குதல், பாம்பாட்டுதல் கழைக் கூத்தாட்டம், பட்டாசு, வெடி மருந்துக்கள் முதலியவை தயாரித்தல், மூலிகைகள், பச்சிலைகள் முதலியவற்றின் ரகசியங்களை அறிதல் தவம் செய்தல் சமாதியில் இருத்தல், மந்திரம் தந்திரம் போன்றவற்றால் துர்த் தேவதைகளை அடக்கியும் பேய் பிசாசுகளை ஓட்டியும் பில்லி சூனியங் களை அகற்றியும் பெருமைபெறுதல், தன்னுடைய அபூர்வ சக்தியால் புண்ணிய காரியங்களைச் செய்து யோகி என்றும் மகான் என்றும் பெயரெடுத்தல் மத நியமங்களை வைராக்கியத்துடன் அனுசரித்தல், வைராக்கியத்தால் மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களைச் செய்து காட்டுதல், யோக நிஷ்டைகளால் வெற்றி பெறுவதோடு தேவதைகளின் அருள்பெற்று அற்புதமான காரியங்களைச் செய்தல் இவையெல்லாம் கேதுவால் உண்டாகும் நல்ல பலன்களாகும்.

கேதுவால் ஏற்படும் தீய பலன்கள்

விஷஜந்துக்களால் தீண்டப்படல், நெருப்பில் விழுதல் திராவகம் வெடிமருந்துகள் போன்றவற்றால் அபா யங்கள், மறைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிகள், வெடி குண்டுகள் சுரங்கவெடி முதலானவற்றால் ஆபத்துக்கள், விஷக்கிருமிகளால் உண்டாகும் நோய்கள், தோல் சுருங்கு தல், தோலில் நீர் வடிதல், அம்மை குஷ்டரோகம்,

போன்ற நோய்கள் ஆசன ரோகம் உள்ளுறுப்புக்களில் நோய்கள் பிளவை புற்றுநோய் போன்றவை எல்லாம் கேதுவால் உண்டாகும் கொடிய பலன்களாம்.

எல்லா வசதிகள் இருந்தும் கெட்டுப்போன ஆகாரம் அழுகிப்போன பழங்கள் போன்றவற்றைப் புசிக்க நேர்தல், மட்டரகமான மாமிசங்கள் பட்டைச் சாராயம் போன்ற மோசமான குடி வகைகள் கஞ்சா, அபின் போன்ற மோசமான போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், அங்கம் குறைவுபடல், நிறம் மாறுதல் அவலட்சணமாகவும் கருப்பாகவும் உள்ள நடத்தைக் கெட்ட மோசமான பெண் களின் சகவாசம், நீச்சர்கள் புலையர்கள் அவர்களைப் போன்ற மோசமான நடத்தையுடைய அந்நியர்கள், திருட்டு, கள்ளச் சாராயம் காய்ச்சுதல், விபச்சாரத்தொழில் நடத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள மக்களுடன் தொடர்பு அவர்களுடன் வசித்தல், நிலையான தொழில் இன்றி மோசமான வழிகளில் அவ்வப்போது கிடைப் பதைக் கொண்டு பிழைப்பு நடத்துதல் நல்ல மக்களின் விரோதம், மனைவி மக்கள் பகையாதல், பந்து ஜனங் களால் வெறுக்கப்படுதல், விஷத்தை உட்கொள்ளுதல், கயிற்றில் தொங்குதல், கிணற்றில் விழுதல் போன்ற துர் மரணங்களுக்கு ஆளாதல், கை கால் முறிதல், வெட்டுப் படுதல், உயரத்திலிருந்து சறுக்கி விழுதல், மலைகள் காடுகளில் பயங்கரமான ஆபத்துக் குள்ளாதல், மலைப் பாம்புகள் வன விலங்குகள் போன்றவற்றால் உண்டாகும் அபாயங்கள், மாந்திரீகம் பில்லி சூனியம், ஏவல் போன்ற வற்றால் அபாயங்களுக்குள்ளாதல், பைசாச பீடை ஆவிகளைக் கண்டு அஞ்ச நேர்தல், திகைப்பு பிரமிப்பு, வாய் அடைத்துப் போதல், கை கால் வராமல் போதல் துராசை, கெட்ட செயல், அந்நியர்களுக்காக வேலை செய்தல், கைக் கூலி வாங்கிக் கொண்டு நம்பியவர்களை மோசம் செய்தல், பிறரை ஏமாற்றிப் பிழைத்தல் உருவம்

விகாரமாக மாறுதல், நாட்டைவிட்டுத் துரத்தப்படுதல் நல்லவர்களின் வெறுப்புக்காளாதல், வேறு பெயர் வைத்துக் கொண்டு அல்லது வேறு மனிதன் போல் நடித்துப் பிழைத்தல் முதலானவை கேதுவால் ஏற்படும் கெட்ட பலன்களாம்.

கேதுவால் உண்டாகும் தீமைகள் குறைய நாள் தோறும் செய்ய வேண்டிய கேது ஸ்தோத்ரம்.

கேது: கால: கலயிதா தூம்ர கேதுர் விவர்ணக:
லோக கேதுர் மஹா கேதுः ஸர்வ கேதுர் பக ப்ரத:
ரௌத்ரோ ருத்ர ப்ரியோருத்ர க்ரூரகர்மா
ஸுகந்தத்ருக்
பலாலதூம ஸங்காச: சித்ர யக்ஞோபவீத த்ருக்
தாராகண விமர்தீ சஜைமினேயோ க்ரஹாதிப:
(கணேச தேவோ விக்னேச: விஷ ரோகார்த்தி நாசன:
ப்ரவ் ராஜ்யதோ க்ஞான தச்சதீர்த்த யாத்ரா
ப்ரவர்தக:
பஞ்ச விம்சதி நாமானி கேதோர்ய: ஸததம் படேத்)-
தஸ்ய நச்யதி பாதா சஸர் வா கேது ப்ரஸாதத:
தஸ்ய நச்யதி பாதா சஸர் வா கேது ப்ரஸாதத:
தனோ தான்ய பசூனாம்ச பவேத் விருத்திர் ந ஸம்சய:
கேது ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

கேது காயத்ரீ

அச்வத் வஜாய வித்மஹே சூல ஹஸ்தாய தீமஹி
தன்னோ: கேது: ப்ரசோதயாத்

கள்வர் பயம், அக்னிபயம்: பைசாச பயங்கரங்களி லிருந்து விடுபட கேது பகவானைக் குறித்து ஸ்தோத்ரம் செய்வதற்கான தியான ஸ்லோகம்.

தூம்ர வர்ணம் த்வி பாஹும்ச கேதும்ச விக்ருதானனம்
த்வாஜ ந ககதம் நித்யம் தியாயேத் ஸர்வ பரப் தயே ||

கேதுவைக் குறித்துச் செய்ய வேண்டிய மந்திர ஜெபம்.

ஓம் ப்ராம் ப்ரீம் ப்ரௌம்ச: கேதுவே நம:
இம்மந்திரத்தை ஏழாயிரம் முறை செபிக்க வேண்டும்.

கேதுவினால் உண்டாகும் அசுப பலன்கள் தீர தினசரி சூரிய நமஸ்காரம் செய்வதும் கேதுவுக்குரிய மந்திர ஜெபம் செய்து, கொள்ளு தானம் செய்வதும் நல்லது:

கேது திசை புத்தி நடைபெறுபவர்கள் அசுவினி, மகம், மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கேதுக்குரிய ரத்தினமாகிய வைடூர்யத்தை (பூனைக்கண் நிறம் உடையது) அணிவது நல்லது.

ராகு கேது திசை நடைபெறுபவர்கள் மேற்படி கிரகங்கள் யந்திர ரூபத்தில் தங்களை பிரதிஷ்டை செய்து கொண்டு வழிபட்டு வரும் திருக்காளத்தி (காளஹஸ்தி) சென்று அங்கு வாயு ரூபமாக எழுந்தருளியுள்ள இறைவனை பிரார்த்திப்பதும் ராகு கேதுக்களுக்கான மந்திர ஜெபம் செய்வதும் மிகவும் நல்லது.

சகல காரிய சித்தி தரும் எண் யந்திரங்கள்

கிரகங்களுக்கு மட்டுமன்றி அவரவர்க்கு நினைத்த காரியம் நிறைவேறுவதற்கு வீட்டில் வைத்து பூஜிக்க வேண்டிய எண் யந்திரங்களையும் சித்தர்கள் வழங்கியிருக்கிறார்கள்: இந்த எண் யந்திரங்களை தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் வரைய வேண்டும். சக்கரங்களுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை அனுசரித்து வரைந்து வைத்து பூஜிக்கவேண்டும்.

1. நவக்கிரக மந்திர கவசம்

இது சகல காரிய சித்தி தரும் பொதுச் சக்கரம் எனலாம். உடல் நலம் வசீகர சக்தி, முயற்சிகளில்

வெற்றி, பொருள் லாபம் முதலானவற்றைக் கொடுக்கக் கூடியது.

பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் போட்டிகளில் வெற்றி பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள் முதலான சகலருக்கும் இந்த எண் சக்கரம் நன்மை தரும்.

அவரவர் ஜென்ம ராசிக்கு மூன்று ஆறு பத்தாம் வீடுகளை சுப கிரகங்கள் பார்க்கின்ற கோச்சாரம் அமைந்த நாளில் இந்தச் சக்கரத்தைத் தயாரிக்க வேண்டும். திங்கள், புதன் அல்லது வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை நேரத்தில் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குளித்து திருநீறு அல்லது திருமண் அணிந்து பய பக்தியோடு சக்கரத்தைக் கிழக்கு முகமாக வைத்து விளக்கேற்றி வைத்து தியானம் செய்ய வேண்டும்.

போட்டி 62

23	30.	2	7.
6.	3.	27	26
29.	24	8	1
4.	5	25	28.

சக்கரத்தோடு துர்க்கை, விஜயலட்சுமி அல்லது இஷ்ட தெய்வத்தின் படத்தையும் வைத்து பூஜிக்கலாம். ஆனால் குறிப்பாக பார்வையை சக்கரத்தின் மேலேயே நிலை நிறுத்தி தியானம் செய்வது நல்லது. தாங்கள் எடுத்துக்

கொண்டுள்ள குறிப்பிட்டுள்ள முயற்சியில் வெற்றி பெற தெய்வம் அருள் புரிய வேண்டும் என்ற வகையில் தியானம் செய்ய வேண்டும்.

2. வெற்றியும் புகழும் தருகின்ற பொதுச் சக்கரம்

24	31	2.	7
6	3.	28	27
30	25	8	1
4.	5	26	29

வெற்றி புகழ் 64

கோச்சாரத்தில் கிரகங்கள் தனக்கு நன்மை தரக்கூடிய விதமாக அமைந்துள்ள நாளில் சக்கரத்தை தயாரித்து வைத்து பூஜை தொடங்க வேண்டும்.

இந்த இரண்டு சக்கரங்களையும் கண்ணாடி போட்டு வியாபார ஸ்தலங்களில் மாட்டி வைக்கலாம்.

3. செல்வம் தரும் சக்கரம்

கோச்சாரப்படி இரண்டு ஒன்பது அல்லது பதினொன்றாம் வீட்டை (தனபாக்ய லாப ஸ்தானங்கள்) சுக்கிரன் பார்க்கும் காலத்தில் யந்திரத்தைத் தயார் செய்து பூஜையை தொடங்க வேண்டும்.

இந்தச் சக்கரத்தை வைத்து பூஜிப்பதால் நாளுக்கு நாள் செல்வம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும்

செல்வம் 104

44	51	2	7
6	3	48	47.
50	45.	8	1.
4	5	46.	49

சந்தோஷமும் உண்டாகும். ஸ்தோத்திரங்களைச் சொல்லி வழிபடுகிறவர்கள் தனலட்சுமி, துர்க்கை முதலான தேவதைகளுக்குரிய ஸ்தோத்திரங்களைச் சொல்லி வழிபடலாம்.

4. வசியச் சக்கரம்

எந்தக் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டுமானாலும் அதற்கு ஒரு முகராசி வேண்டும். அதைத்தான் வசீகர சக்தி என்று சொல்லுவார்கள். சிலர் எங்கே போனாலும் புகுந்து புறப்பட்டுப் பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து செய்ய வேண்டியவற்றைச் செய்து தங்கள் காரியங்களை முடித்துக் கொள்வதைக் காணலாம். அவர்கள் சும்மா நின்று கொண்டிருந்தாலும் யாராவது பார்க்கிறவர்கள் ஏன் நிற்கிறீர்கள்? உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று வலிய வந்து உதவி செய்வார்கள். இதைத்தான் வசிய சக்தி என்று சொல்வது.

ஒருவன் ஒரு குறிப்பிட்ட பெண்ணை வசியம் செய்வதற்காக வசீகர மந்திரங்களையும் மற்ற காரியங்களையும் செய்யலாம். இது தவறு என்று கருதப்படா விட்டால்கூட அவ்வளவு நல்ல காரியமல்ல. அதிலும் சில பேர் துராசை கொண்டு வசீகர மந்திரங்களை பிரயோகம் செய்து வெற்றி காண முயல்வார்கள். அது மிகவும் தவறு. அப்படிப்பட்டவர்கள் மீளாத துன்பத்திற்கு ஆளாவதோடு முடிவில் நரகத்தில் போய் விழுவார்கள்.

வசியம் 76

30	37	2	7
6	3	34	33
36	31	8	1
4	5	32	35

நமக்கு அத்தகைய வசிய மந்திரங்கள் தேவையில்லை. பொதுவாகத் தனது வசீகர சக்தியால் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடிந்தாலே போதுமானது. வியாபாரம் பெருகவும், மேலதிகாரிகளின் ஆதரவு பெறவும், வாழ்க்கையில் மேலும் மேலும் முன்னேறவும் வசிய சக்தி அவசியம். அதற்கு இந்தச் சக்கரத்தை தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் எழுதி வைத்து பூஜிப்பதும், அல்லது நாற்பத்தெட்டு நாள் பூஜைக்குப் பிறகு குளிசமாக அணிந்து கொள்வதும் நல்ல பலன்தரும்.

கோச்சாரப்படி தங்களுடைய ஜென்ம ராசிகளிலிருந்து மூன்றாம் வீட்டை சுப கிரகம் பார்க்கும் காலத்தில் பூரன்

வியாழன் அல்லது வெள்ளிக் கிழமைகளில் யந்திரத்தை எழுதி பூஜை செய்ய ஆரம்பிக்கலாம். இந்தப் பூஜையில் நறுமண மலர்கள், புனுகு, சந்தனம், ஜவ்வாது முதலான வற்றுக்கு முதலிடம் தரப்படும்.

5. எதிரியை வெற்றி கொள்ளும் சக்கரம்

வெற்றி 4.6

15	22	2	7
6	3	19	18
21	16.	8	1
4	5	17	20

பழங்காலத்தில் அரசர்கள் தங்கள் எதிரிகளின் மேல் படையெடுத்துச் செல்லும் காலத்தில் இந்தச் சக்கரத்தை பூஜித்து அணிந்து கொண்டு சென்றார்கள். போர் வீரர்கள் தாங்கள் அணியும் கவசத்தின் உட்புறம் இந்தச் சக்கரத்தை எழுதிக் கொள்வது வழக்கமாக இருந்தது.

இக்காலத்தில் எல்லா விஷயங்களிலும், போட்டிகள், பகை வாழ்க்கையில் குறுக்கிடுகிறது. ஒரே வியாபாரம் செய்பவர்கள், ஒரே பதவிக்காக போட்டி போடுகிறவர்கள், தொழில் தகராறு, நிலத்தகராறு, வழக்கு வியாஜ்யங்கள் முதலானவற்றில் வெற்றி பெறுவதற்கு இந்த யந்திரத்தை வைத்து பூஜிப்பது உத்தமம்.

கோச்சாரத்தில் உங்களுடைய ஜென்ம ராசிக்கு பலம் தரத்தக்க விதமாக கிரகங்கள் அமைந்துள்ள நேரத்தில்

இந்தச் சக்கரத்தை வரைந்து பூஜை செய்யத் தொடங்க வேண்டும். முக்கியமாக ஜென்ம ராசியிலிருந்து மூன்றாம் வீட்டுக்குடையவர் கேந்திரம் அல்லது திரிகோணத்தில் ஆட்சி அல்லது உச்சம் பெற்று நவாம்சபலமும் பெற்றிருக்கும் காலத்தில் பூஜையைத் தொடங்குவது உத்தமம்.

6. மகப் பேறு யந்திரம்

மகப்பேறு 100

42	49	2	7
6	3	46	45
48	43.	8	1
4.	5	44	47

மகப்பேறு இல்லாதவர்கள், மக்கட்செல்வம் அடைவதற்காகவும், கர்ப்ப காலத்தில் நோய் நொடிகள் இதர தொல்லைகள் ஏற்படாதிருக்கவும் சுகப்பிரசவம் ஏற்படவும் குழந்தை பிறந்தபின் பாலாரிஷ்ட தோஷங்கள், காற்றுக் கறுப்பு அண்டாமல் இருக்கவும் இந்த யந்திரத்தை வைத்து பூஜித்து வருவது அல்லது குளிசமாக அணிந்து கொள்வது நன்மை உண்டாக்கும்.

கோச்சாரப்படி ஜென்ம ராசியிலிருந்து ஐந்தாவது வீட்டை குரு பார்க்கின்ற காலத்தில் சந்திரனும் குரு பார்வையில் வருகின்ற நாளில் நல்ல நாளாகப் பார்த்து யந்திரத்தைத் தயார் செய்து பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

7. கண்ணேறு அல்லது செய்வினை விலக்கும் சக்கரம்

3	10	2.	7
6	3	7.	6
9	4.	8	1
4.	5.	5.	8.

22 கண்ணேறு செய்வினை

சித்தர்கள் வரைந்துள்ள எண் சக்கரங்களிலே இது மிகவும் முக்கியமானது.

திருஷ்டியினால் உண்டாகும் தோஷங்களைப் பற்றி பல நூல்களில் கூறப்பட்டுள்ளது. ராஜபார்வை, பிராமணன் பார்வை தேவதைகளின் பார்வை முதலியவற்றால்கூட ஒருவனுக்குக் கெடுதல் ஏற்படலாம். பொதுவாகவே ஜனங்களுக்கு மற்றவர்கள் நன்றாக இருப்பது பிடிப்பதில்லை. ஒருவன் பார்ப்பதற்கு அழகாக இருந்தால் நன்றாக உடையணிந்து கொண்டு போனால், வண்டிவாகனங்களில் ஆடம்பரமாகச் சென்றால், வசதியாக இருந்தால் வீடுகட்டினால் இன்னும் வேறு எந்த விதத்தில் நன்றாக இருந்தாலும் அதைப் பார்த்து அசூயைப்படுகிறவர்கள் அதிகம்.

திருஷ்டி தோஷங்களிலே மிகவும் கெட்டது ராஜ பார்வை, பிராமணன் பார்வை, விதவைப் பார்ப்பனியின் பார்வை.

இன்னும் சில பொறாமையே குணமாகக் கொண்ட நபர்களின் பார்வை முதலியவற்றைச் சொல்லலாம்.

திருஷ்டி தோஷம் விலகுவதற்காக புதுவீடு கட்டு பவர்கள் வைக்கோலால் உருவம் செய்து கட்டுவதும், பழமரங்களில் செருப்பு முதலானவற்றைக் கட்டித் தொங்க விடுவதும், வீடுகளில் படிகாரம், கறுப்புக்கயறு, கும்மட்டிக் காய், எலுமிச்சம்பழம் முதலானவற்றைக் கட்டித் தொங்க விடுவதும், பூசணிக்காய் அல்லது திருஷ்டி பொம்மை வைப்பதும் முதலானவற்றைப் பார்க்கிறோம்.

குழந்தைகளுக்குத் திருஷ்டிப் பொட்டு வைப்பார்கள். திருஷ்டி சுத்திப் போடுவார்கள். இவையெல்லாம் கொள்ளிக்கண் பார்வையால் உண்டாகும் தோஷங்களை விலக்குவதற்காகவே.

மற்றவர்கள் நன்றாயிருப்பதைப் பார்த்துப் பொறுக்க முடியாத பொறாமைப் பிடித்தவர்கள் கெடுப்பதற்காக செய்வினை செய்வது ஏவல், பில்லி, சூன்யம் வைப்பது முதலான பாவச் செயல்களில் ஈடுபடுவதும் உண்டு. முக்கியமாக இது நெருங்கிய உறவினர்கள், பங்காளிகள், அக்கம் பக்கம் வசிப்பவர்கள், ஒரே தொழிலைச் செய்பவர்கள் இவர்களிடையே மிகவும் அதிகம். பங்காளிக் காய்ச்சலால் குடும்பங்களே அடியோடு நாசமான கதை களைக் கேட்டிருக்கிறோம். அதிலும் ஒருவர் சொத்து வசதி உள்ளவராகவும், மற்றவர் வசதி இல்லாதவராகவும் இருந்துவிட்டால் கேட்க வேண்டியதேயில்லை.

பகைமை காரணமாக அடுத்தவன் குடியைக் கெடுக்க நினைப்பவன் மஹா பாவத்தைச் செய்து தன்னைத்தானே கொடிய நரகத்தில் தள்ளிக் கொள்கிறான் என்பதை பொறாமையால் அகம்பாவமும், ஆத்திர குணமும் கொண்ட நேரத்தில் யாருக்குமே புரிவதில்லை.

இம்மாதிரியான திருஷ்டி தோஷங்களிலிருந்தும் செய்வினை பில்லி சூன்யம் முதலானவற்றிலிருந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சித்தர்கள் அற்புதமான இந்த சக்கரத்தை அருளி உள்ளனர். செவ்வாய்க் கிழமையில் வரும் அமாவாசை தினத்தில் தங்கம் அல்லது தாமிரத் தகட்டில் இந்தத் தகட்டை வரைந்து பூஜையை தொடங்க வேண்டும். ஒரு மண்டலம் பூஜை செய்தபின் குளிசமாக அணிந்து கொள்ளலாம். இந்த யந்திரத்தை வாசக்காலில் மேல் சட்டத்தில் பதித்து வைக்கலாம். சுவற்றில் எழுதி மாட்டலாம். குழந்தைகளுக்கு அணிவிக் கலாம். நல்ல பலன்தரும்.

8. நோய் தீர்க்கும் சக்கரம்

13	20	2	7
6.	3	17	16
19	14	8	1.
4.	5.	15	18

கூடு 42.

நோய்வாய்ப் பட்டவர்கள் விரைவில் குணமடையவும், அடிக்கடி நோய்வாய்ப்படும் குழந்தைகளுக்கும் நீண்ட காலமாக நோயால் துன்புறுகிறவர் உடல்நலம் பெறவும் இந்தச் சக்கரத்தை வரைந்து பூஜை செய்து குளிசமாக அணிந்து கொள்வது நன்மை பயக்கும்.

யாருக்கு நோய் குணமாக வேண்டுமோ அல்லது நோய் வராமல் தடுக்க வேண்டுமோ அவரது ஜனன ராசியிலிருந்து ஆறாவது வீட்டை சுபகிரகங்கள் பார்க்கின்ற கோச்சாரத்தில் யந்திரத்தை வரைந்து பூஜை செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

நோய் தீர சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும் என்பதும் தினசரி சூரியனைப் பார்த்து தியான ஸ்லோகம் சொல்லி துதித்து வருவதும் நன்மை பயக்கும்.

சர்வ லோகங்களிலிருந்தும் நிவர்த்தி அளிப்பதும் செல்வம் பெருகச்செய்வதுமான சூரிய ஸ்தோத்திரம் கீழ்:

(சர்வரோக நிவாரிணி சம்பத் காரிணி)

1. ஆதிதேவ நமஸ்துப்பயம் பிரசீத மமபாஸ்கர திவாகர நமஸ்துப்பயம் பிரசபாகர நமோஸ்துதே''

2. சப்தாஸ்வரத மாருடம் பிரசண்டம் கஸ்யபாத்மஜம் ஸ்வேத பத்மதரம் தேவமதம் ஸூர்யம் பிரணமாம் யஹம்''

3. லோஹிதம் ரத மாருடம் சர்வலோக ஹிதாமார்யம் மஹாபாபஹரம் தேவம்தம்ஸூர்யம் பிரணமாம் யஹம்''

4. த்ரை குண்யஞ்ச மஹாசூரம் பிரம்மவிஷ்ணு மஹேஸ்வரம் மஹாபாப ஹரம் தேவம்தம் ஸூர்யம் பிரணமாம்யஹம்.'

5. பிரம்ஹிதம் தேஜஸாம் புஞ்சம் வாயுராகாச மேவச ப்ரபூஸ்க்வம் ஸாவலோகானாம் தம் சூரியம் பிரணமாம்யஹம்''

6. பந்தூக புஸ்ப சம்காசம் ஹாரகுண்டல பூரிதம் ஏக சக்ர தரம் தேவம் தம் சூர்யம் பிரணமாம்யஹம்''

7. விஸ்வேசம் விஸ்வாதாரம் மஹாதேஜ பிரதீபனம் மஹாபாப ஹரம்தேவம் தம் சூர்யம் பிரணமாம் யஹம்''

8. ஸ்ரீ விஷ்ணு ஜகதாம் நாதம் ஞான விஞான மோக்ஷதம் மஹாபாபஹரம் தேவம் தம் சூர்யம் பிரணமாம் யஹம்'' பலன்- சூரியாஷ்டகத்தை தினமும் பாரா யணம் செய்பவர்களுக்கு கிரகபீடைகள் நீங்கும். தரித்திரர்களுக்கு சம்பத் சித்தியுண்டாகும். புத்திரப் பேறு கிட்டும் ஞாயிற்றுக் கிழமைகளில் மதுபானம், மாது, மாமிச பக்ஷணம் இவற்றை நீக்குபவன் பாஸ்கரன் அருளுக்கு பாத்திரமாவான்.

சித்தர்கள் அருளிய மோதிரச் சக்கரங் ள்

கிரக சாந்திக்காக ஒவ்வொரு கிரகத்தையும் திருப்திப் படுத்தும் எண்களைக் கொண்ட மோதிரச் சக்கரங்களையும் சித்தர்கள் வகுத்துள்ளனர். சூரியனுக்குரிய சக்கரத்தை தங்கத்தில் செய்து சிவப்பு எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாகச் செய்து அணியலாம்.

சந்திரனுக்குரிய சக்கரம் வெள்ளியில் செய்து முத்துப் போல் ஒளிவிடும் எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படி யாகச் செய்து சுண்டு விரலில் அணியவேண்டும்.

அங்காரகனுக்குரிய சக்கரத்தை செம்பு அல்லது தங்க மோதிரத்தில் கருஞ்சிவப்பு நிற எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாக செய்து அணியலாம்.

சூரியன் 15

8	1	6
3	5	7
4	9	2

புதன் 24

9	4	11
10	8	6
5	12	7

சந்திரன் 18

7	2	9
8	6	4
3	10	5

வியாழன் 27

10	5	12
11	9	7
6	13	8

செவ்வாய் 21

8	3	10
9	7	5
4	11	6

சுக்கிரன் 30

11	6	13
12	10	8
7	14	9

சனி 33

12	7	14
13	11	9.
8	15	10

ராகு 36

13	8	15
14.	12	10
9	16	11

கேது 39

14.	9	16
15	13.	11
10	17	12

புதனுக்குரிய மோதிரம் பித்தளை அல்லது தங்கத்தில் செய்து பச்சை நிற எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாக அணிய வேண்டும்.

குருவுக்குரிய மோதிரம் தங்கத்தில் செய்யப்பட்டு பசுமை கலந்த மஞ்சள் நிறமான எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாக அமைய வேண்டும்.

சுக்கிரனுக்குரிய மோதிரம் வெள்ளி அல்லது பிளாட்டினத்தில் செய்து பலவர்ண எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாகச் செய்து அணிய வேண்டும்.

சனிக்குரிய மோதிரம் துத்தநாகம் அல்லது வெள்ளியில் செய்து கருப்பு அல்லது கருநீல வண்ண எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாக அமைய வேண்டும். இந்த மோதிரத்தை நடுவிரலில் அணிய வேண்டும்.

ராகுவுக்குரிய மோதிரம் தகரம் அல்லது வெள்ளியில் செய்து கருப்பு அல்லது கருஞ் சிவப்பு நிறத்தில் மெல்லிய கோடுகள் அமையும்படியான எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாகச் செய்து சுண்டு விரலில் அணிய வேண்டும்.

கேதுவுக்குரிய மோதிரம் தங்கத்தில் செய்து கருஞ் சிவப்பு எனாமல் பூச்சில் எண்கள் தெரியும்படியாகச் செய்து அணிய வேண்டும்.

எந்த கிரகத்தின் மோதிரம் அணிகிறோமோ அந்தக் கிரகம் கோச்சார ரீதியாக நல்ல நிலைமையிலிருக்கும் போது செய்து அணிவது நல்லது. மோதிர சக்கரத்தை அந்தந்த கிரகத்திற்குரிய உலோகத்தில் பெரிதாக எழுதி வைத்து பூஜிக்கலாம். அல்லது நவக்கிரகங்களுக்கான எண் சக்கரங்களையும் கிரமப்படி ஒரு பெரிய தாமிரத் தகட்டில் எழுதி வைத்து பூஜிக்கலாம்.

வடக்கு

கே	குரு	பு
சனி	சூ	சுக்
ராகு	அங்	சந்

நவக்கிரகங்களுக்குரிய நவரத்தினங்களைப் பதித்து மோதிரம் அணிந்துகொள்ள விரும்புகிறவர்கள் கீழேகண்ட வரிசைப்படி அந்தந்த கிரகங்களுக்குரிய ரத்தினங்களைப் பதித்து மோதிரமாக செய்து அணியலாம்.

வடக்கு


வைடூரியம்	புஷ்பராகம்	பச்சை	
நீலம்	மாணிக்கம்	வைரம்	கிழக்கு
கோமேதகம்	செம்பு (அ) பவளம்	முத்து	

சகல மங்கள காரியங்களுக்கு

ஐங்கோணச் சக்கரம்

புது மனை கட்டுதல், புதிய வியாபாரம் செய்தல், தொழில் ஆரம்பித்தல் முதலான சகல காரியங்களுக்கும் உதவும்படியான எண் எழுத்துச் சக்கரம் ஒன்றும் சித்தர்கள் அருளியுள்ளனர்: கீழே காணும் மூன்று சக்கரங்களில் எண் அல்லது எழுத்துச் சக்கரத்தை வரைந்து அதன் அருகில் குத்து விளக்கேற்றி வைத்து வழிபட்டுக் காரியம் தொடங்கினால் சதாசிவத்தின் அருளால் வெற்றி கிட்டும், சுபமாக முடியும்.

இந்தச் சக்கரத்தைப் பஞ்சலோகம் அல்லது சுயமான தங்கத்தில் தகடு செய்து அதன் மேல் வரைந்து பஞ்ச பீஜ அட்சரங்களை ஐந்து கோணங்களிலும் அமைத்து வீட்டில் அல்லது வியாபார ஸ்தலத்தில் மாட்டி வழிபட்டு வர மேன் மேலும் விருத்தியும் சுகமும் உண்டாகும்.



சுபம்

தாமரை

நூலகம்